ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 3. பத்திரமித்திரன் அறங்கேள்விச் சருக்கம்

224. மந்தரம் நடுவ தாகக் குலமலை ஆறின் வந்த
அந்தரத்து ஏழு நாடாம் ஆறும் ஈரேழ தாகிச்
சுந்தரத் தடங்கள் ஆறில் சூழ்ந்தவே திகைத்து மாகி
நந்திய மதியின் நின்ற நாவலம் தீவினுள்ளால்.

உலகின் மையப் பகுதியில் மேருமலையும், பக்கங்களில் ஆறுகுல மலைகளும், இடையே பரதம் முதலிய ஏழு நாடுகளும், பதிநான்கு நதிகளும், அழகிய பொய்கைகள் ஆறும் இவற்றைச் சூழ்ந்து மாபெரும் உப்புக் கடலானது பலம்மிக்க அகழி போல் இருக்க முழுமதி போல் வட்டமாக நிலைபெற்றிருந்த 'சம்புத் தீவிலே–

225. பாகதுண் டத்தைப் போலும் பரதகண் டத்துச் செம்பொன்
நாகதுண் டத்தை ஒக்கும் தருமகண் டத்து நல்ல
போகதுண் டத்தைப் போலும் சீயமா புரத்தைச் சூழ்ந்து
மேகதுண் டங்கள் மேயும் சோலைநா டுண்டு திங்கள்.

அரைச்சந்திரனைப் போன்ற பரத கண்டத்தில், பொன்மயமான விண்ணுலகத்தைப் போன்ற நல்ல தரும கண்டத்திலே, போகபூமிக்கு நிகரான 'சீயமாபுரம்' என்னும் நகரத்தைத் தலைமையாகப் பெற்று, கார்முகில்கள் தவழும் சோலைகள் நிறைந்த நாடு ஒன்று விளங்கியது.

226. சீயமா புரத்தின் தன்மை செப்புவன் சிறிது கேண்மோ
காயம் ஆறாகச் செல்வோர் கண்டபின் கடந்து போகார்
தூயவாம் தலம் செய் குன்றம் சோலைகள் மாடம் தம்மால்
சேயிழை மட நல் லார்போல் சித்தத்துக் கினிய தொன்றே.

இனி சீயமாபுரத்தின் சிறப்பினைச் சிறிது சொல்லுகின்றேன் கேட்பீர்களாக! விண்ணிலே செல்லுகின்ற வானவர்கள் இதைக் கண்ணுறின் மேலே போகமாட்டார்கள்; பல்வேறு தூய இடங்களும், செய் குன்றுகளும், சோலைகளும், மாட மாளிகைகளும் காண்பதற்கு அணிகளை அணிந்த மடமையும், அழகும் மிக்க மங்கையர்களைப் போல் உள்ளத்திற்கினிய தோற்றத்துடன் காட்சியளித்தன.

227. செப்பிய நகர்க்கு நாதன் சீயமா சேனன் என்பான்
வெப்பம்நின்று அறாத வேலான் வேந்தரை வென்ற பெற்றிக்கு
ஒப்புமை இன்றி நின்றான் உதவிகற் பகத்தை ஒப்பான்
துப்புறழ் தொண்டை வாயார் தொழுதெழு காமன் கண்டாய்.

மேலே கூறப்பட்ட சீயமாபுரத்தின் மன்னன் சீயசேனன், பகைவர்கள் மீது கொண்ட சினம் தணியாத வேலினை யுடையவன்; மாற்றார்களை வெல்வதில் நிகரற்று விளங்கியவன், வாரி வழங்குவதில் கற்பகத்துக்கு இணையானவன், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையுடைய மங்கையர் மகிழ்ந்து வணங்கும் காமனுக்கு ஒப்பானவன்.

228. ஊன் உமிழ்ந்து இலங்கும் வைவேல் மன்னவன் உள்ளத் துள்ளான்
தேன் உமிழ்ந்து இலங்கும் ஐம்பால் தேவிதான் இராம தத்தை
வான் உமிழ்ந்து இலங்கும் மின் போல் வருந்து நுண் இடையாள் வாரி
தான் உமிழ்ந்து அமிழ்து பெய்த கலசம் போல் தனத்தி னாளே.

ஊன் சிந்தி இலங்கும் கூர் வேலினையுடைய மன்னனது உள்ளத்தே உறைபவள், தேன்சிந்தும் ஒளிமலர்களுடைய ஐந்து விதமாக அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடையவள், வானத்து மின்னலைப்போன்ற இடையுடையவள், பாற்கடலில் தோன்றிய அமுத கலயத்தைப்போன்ற தனங்களையுடையவள், இவளே மன்னன்தேவி 'இராமதத்தை' என்பவள்.

229. வேதம் நான்கு, அங்கம் ஆறும் புராணமும் விரிக்கும் சொல்லில்
தீதிலா 'சத்திய கோடன்' நாமம் சீபூதி என்பான்
போதுலா முடியி னானுக்கு அமைச்சனாய்ப் புணர்ந்து பின்னைத்
தீதெலாம் அகற்றி வையம் செவ்வியால் காக்கும் நாளால்.

நான்கு வேதங்களையும், அறுவகை நீதி நூல்களையும், பதினெட்டு புராணங்களையும் உணர்ந்து உரைக்கும் ஆற்றலுடையவன், குற்றமற்ற சொற்களால் உண்மையைப் பேசுகின்றவன் 'சிபூதி' என்னும் பெயருடையவன்; மலர் மாலைகள் விளங்கும் முடியுடை வேந்தன் சீயசேனனுக்கு அமைச்சனாக அமைந்ததால், உலகின் தீமைகளை அகற்றி ஆட்சி சிறப்பாக நடந்து வரும் நாளில்.

(வேறு)

230. பத்ம சங்க நிதிக்கிட மாயது
பத்ம சண்டம் எனப்பகர் மாநகர்
மற்றதன்கண் வணிகொரு வன்உளன்
சொற்க டந்த கொடைக்கைச் சுதத்தனே.

அதே நாட்டில், பத்மம், சங்கம் என்னும் பெருநிதிகளுக்கு இருப்பிடமாகிய பத்மசண்டம் என்னும் பெயருடைய நகரத்தில் புலவர்களும் புகழ்தற்கரிய வள்ளல் தன்மைமிக்க 'சுதத்தன்' என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான்.

231. மற்ற வன்தன் மனைக்கு விளக்கனாள்
சுற்ற நன்மையின் நாமம் சுமித்திரை
விற்கு னிப்புரு வத்தொளிர் வேற்கணாள்
கற்ப லர்ந்தஓர் காமரு வல்லியே.

ஒளி விளக்கு போல் விளங்கும் அவனுடைய மனைவியானவள் வில் போன்ற வளைந்த புருவங்களும், வேல் போன்ற கண்களையு முடையவள், சுற்றங்களுக்கு நன்மை பயப்பவள், சுமித்திரை என்னும் பெயரும், நிறைந்த கற்பும் பெற்று அழகிய பூங்கொடி போன்று விளங்கினாள்.

232. அந்தி யும்அகல் வானும்முன் னாளினால்
இந்து வைப்பயந் தாங்குஅவ் விருவரும்
மைந்த னைப்பயந் தார்மதி போல் வளர்ந்து
அந்த மில்உவ கைக்கிட மாயினான்.

மேல் திசையும், மாலை நேரமும் இணைந்து பிறைச்சந்திரனைப் பெற்றெடுத்தது போல், இவர்கள் ஒரு மைந்தனைப் பெற்றார்கள். அவன் சந்திரன் போல் வளர்ந்து முடிவற்ற இன்பத்திற் கிடமாக விளங்கினான்.

233. சுரந்த கார்முகில் போல சுதத்தன் என்று
இரந்த வார்க்கு இடர் தீர வளித்தவன்
பரந்து லாம் பெயர் பத்திர மித்திரன்எம்
அரந்தை தீர்த்தலின் ஆமென ஓதினான்.

நீர் கொண்ட முகிலுக்கு நிகரானவன் சுதத்தன் என்று போற்றும் வண்ணம் இரந்தவர்கள் வறுமை தீரும்படி வாரி வழங்கிய வணிகனானவன் 'எமது குறை தீரும் வண்ணம் பிறந்த இவனது புகழ்மிக்க பெயர் பத்திரமித்திரன்' எனச்சூட்டி அனைவர்க்கும் அறிவித்தான்.

234. கலையின் இன்பமும் காமரு கன்னியர்
மலைவில் இன்பமும் முத்தொடு மாமணி
விலையி னின்பமும் வேண்டினர்க் கீந்து எய்தும்
தலையி னின்பமும் தானவ னெய்தினான்.

பத்திரமித்திரன் பல்வேறு கலைகளைக் கற்றதனாலும் கவின்மிகு கன்னியர் உறவினாலும் முத்து, மணி இவைகளின் வாணிப ஆக்கத்தினாலும் அடைந்த இன்பத்துடன் வேண்டுவார் வேண்டுவன நல்கியதால் அடைந்த சிறந்த இன்பத்தையும் எய்தினான்.

235. படங் கடந்தணி தங்கிய வல்குலும்
குடங்கை யேஅள வுள்ள கொழுங்கணும்
வடம்சுமந்தெழு கொங்கையும் மங்கையர்
நுடங்கு நுண்ணிடை யுள் நுகர் வெய்தினான்.

பாம்பினது படம் போன்ற அல்குலையும் உள்ளங்கை அளவுள்ள கொழுவிய கண்களையும், முத்துவடங்களையும் மலர் மாலைகளையும் அணிந்து, மதர்த்த மார்பகங்களையும், அசையும் நுண்ணிடையுமுடைய மங்கையர் இன்பத்தை அப்பத்திரமித்திரன் பெரிதும் நுகர்ந்தான்.

236. வளம்சு ருங்கிடின் மாநிதி யும்பலோர்
அளந்து கொண்டுண லாம்படி தானெழல்
உளம்செய்து ஊதியம் உள்பொருள் கொண்டுபோய்
விளங்கு மாமணித் தீவது மேவினான்.

வருவாய் குறையுமானால் ஏற்கெனவே இருக்கும் செல்வத்தைச் சுற்றத்தவர் கணக்கிட்டு அளவோடு உண்ணும்படி ஆகிவிடும், எனவே மேலும் செல்வம் பெருகும்படி, கடல் வாணிபத்திலே ஊக்கம் கொண்டு பத்திரமித்திரனானவன் தன்னிடமுள்ள பண்டங்களை கப்பலில் ஏற்றிக்கொண்டு மிகப்பெரிய அழகிய ஓர் தீவினை அடைந்தான்.

237. சென்று சாத்தோடுஅத் தீவினைச் சேர்ந்தவன்
ஒன்றும் வாணிபத் தால்பெற்ற ஊதியம்
மன்ற மாதவர் கையிட்ட வல்சியால்
நின்ற போக நிலம் பெற்ற தொக்குமே.

வணிகக்குழுவினருடன் அத்தீவினைச் சேர்ந்த பத்திரமித்திரன் தனக்குப் பொருத்தமான வாணிபத்தைச் செய்து அதன் மூலம் பெற்ற ஊதியமானது மிகவும் சிறந்த மாமுனிவருக்குக் கொடுத்த ஆகார தானத்தின் பயனாக நிலை பெற்ற மேலான போக பூமியைப் பெற்றதற்கு நிகரானதாக இருந்தது.

238. புண்ணி யம்உத யம் செய்த போழ்தினில்
எண்ணி லாத பொருட்குவை யாவையும்
நண்ணும் என்றருள் நாதன் உரையினுக்கு
அண்ண லேஎடுத் தீடது வாயினான்.

ஒருவனது புண்ணியவினையானது பயன்தரத்தொடங்கினால், கணக்கற்ற செல்வங்கள் வந்து குவியும் என்று அருகபெருமான் அருளியுள்ளார். அதற்கு எடுத்துக்காட்டாகப் பத்திரமித்திரன் விளங்கினான்.

239. மணியும் முத்தும் வயிரமும் சந்தனத்
துணியும் நல்லகி லும்துகிரும் பிற
மணியும் தூரியும் கொண்டு வரும் அவன்
இணையில் சீய புரமதை எய்தினான்.

உயர்மணிகள், நல்முத்துக்கள், வயிரங்கள், சந்தனக்கட்டை, அகில், பவளம் போன்ற உயர்பொருள்களைச் சேர்த்துக்கொண்டு திரும்பிய பத்திரமித்திரன் ஈடற்ற சீயமாபுரத்தை வந்தடைந்தான்.

240. மிக்க லாபத்தில் மேவிய சிந்தையான்
செக்கர் வான மெனத்திகழ் மேனியான்
திக்க னைத்தும் திகழ்ந்ததோர் தேசினால்
புக்க னன்புரம் வந்தெதிர் கொள்ளவே.

மிகுதியான லாபத்தைப் பெற்ற மகிழ்ச்சிப் பெருக்கினால், அவனது உடலும் செவ்வானத்தைப் போல் எழில் பெற்றுத் திகழ்ந்தது. திக்குகள் அனைத்தும் புகழும் வண்ணம் அந்த நகரம் வந்தடைந்த அவனை அங்குள்ள வணிகர்கள் எதிர்கொண்டு அழைக்க நகரம் புகுந்தனன்

241. அந்நகரின் அழகும் பெருமையும்
மன்னன் நன்மையும் வாணிபத் தாக்கமும்
சொன்ன வை பிற ழாமையும் சோரர்தாம்
இன்மை யும் கண் டிருக்கையு மேவினான்.

அந்த நகரத்தின் பேரழகும், பெருமையும், மன்னனது வாய்மையும், வாணிப வளத்தையும், மக்களது சொல்மாறாத தன்மையும், திருடர் முதலாய தீயவர் இல்லாத நிலையையும் கண்டு நாம் இங்கேயே நிலையாக வாழலாம் என்று முடிவு செய்தான்.

242. மற்றிம் மாநக ரத்தில்இவ் வான் பொருள்
அற்ற மாகநல் லார்கையில் வைத்தணி
பத்ம சண்டமது எய்தியோர் பாங்கிலே
சுற்றமும் அழைத்து என்வழித் தொக்கபின்

அடுத்து இம்மாநகரத்திலிருக்கும் நல்லவர்களிடத்தில் நமது மதிப்பு மிக்க செல்வத்தை யாரும் அறியாமல் வைத்துவிட்டு அழகுமிக்க பத்மசண்டம் சென்று எனது நெருங்கிய சுற்றத்தினர் அனைவரையும் முறைப்படி அழைத்துக்கொண்டு திரும்பி வந்து-

243. பீடி னால் பெயர்ந் திங்கு வந் தோங்கிய
மாட மாநக ரத்திடை வாழ்க்கைமேல்
ஓடும் உள்ளத்தன் ஒண்பொருள் வைப்பிடம்
தேடு வான் சிரி பூதியை நண்ணினான்.

பெருமைமிக்க மாடமாளிகைகள் நிறைந்த இந்நகரத்தில் சிறப்புடன் வாழவேண்டுமென்ற ஆர்வம் கொண்டவனாய் தனது ஒளிமிக்க மணிகளை யாரிடம் ஒப்படைப்பது என்று சிந்தித்து 'சிரிபூதி' என்னும் அமைச்சனை அணுகினான்.

244. மிக்க சீர்த்தியன் வேதியன் வேந்தற்குத்
தக்க மந்திரி சத்திய கோடன் என்று
எக்க தைப் புரா ணம் சுரு திப்பொருள்
வக்க ணிப்பவன் மானவன் அல்லனே.

அந்த சிரிபூதியானவன் பெருஞ்சிறப்புடையவன், அந்தணன், அரசனுக்கு ஏற்ற அமைச்சன், சத்திய கோடன் என்று புகழப்படுபவன். புராணங்களையும், வேதங்களையும் அழகாக விளக்கும் ஆற்றலுடையவன். இவன் மனித உருவில் இருக்கும் தேவனாவான்.

245. தக்கது ஒன்றிவன் கைப்பொருள் வைத்தல் என்று
அக்க ணத்தொரு பாகுடம் ஈந்தபின்
மிக்க மாசனம் வீந்ததோர் போழ்தினில்
தொக்க தன்கரு மம் சொல மற்றவன்

இத்தகைய இவனிடத்திலே நமது செல்வத்தை ஒப்படைப்பதே தக்கது என முடிவு செய்து ஓர் உயர்ந்த பொருளை அமைச்சனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து உடன் இருந்த பெரியோர்கள் அனைவரும் நீங்கிய பின் தான் வந்த நோக்கத்தைப் பத்திரமித்திரன் கூறலும் அதைக்கேட்ட அமைச்சன் கூறினான்:

246. வைத்தல் கோடல் வழங்கிடல் மாய்த்திடல்
துய்த்தல் மாற்றல் இருந்த இடம் சொலல்
இத்திறத்துப் பிறன்பொருள் மேற்செலச்
சித்தம் வைத்தலும் தீவினைக் கேதுவே.

பிறருடைய செல்வத்தை வேறு இடத்தில் வைப்பதும், தானே உரிமையாக்கிக் கொள்வதும், அழித்துவிடுவதும், தான் பயன்படுத்துவதும், வேறொன்றாக மாற்றிவிடுவதும், தன்னிடத்தில் இருக்கின்றது என்பதை வெளியில் சொல்வதும், இப்படி எல்லாம் செய்தால் என்ன என்று மனத்தால் எண்ணுவதும் தீவினைச் சேர்வதற்குக் காரணமாகும் என்றான்.

247. என்றலும் பணிந் தானுக்கு யாவரும்
நின்றி டாப்பொழுது என் கையின் நீட்டென
அன்ற வன் கை அரும் பொருள் வைத்தபின்
முந்தை ஊர்புக மொய்ம்பனும் மேவினான்.

அப்படிக்கூறிய அமைச்சனை மீண்டும் பணிந்து வேண்டிய பத்திரமித்திரனை நோக்கி யாரும் இல்லாத நேரத்தில் என்னிடம் உனது பொருள்களைக்கொடு எனக்கூற, அப்படியே ஒப்படைத்துவிட்டு பத்திரமித்திரன் தனது சொந்த நகரமாகிய பத்மசண்டத்திற்குப் புறப்பட்டான்.

248. வேய்கள் வெந்து வெடித்திடும் ஓசையும்
பாயகள்ளி பரற் பொடி ஓசையும்
ஆயர்தம் குழல் ஓசையும் ஆலைகள்
பாயும் ஓசையும் பாய் விரி ஓசையும்

பாலை நிலத்திலே மூங்கில்கள் வெடிக்கும் ஓசையும் பரந்துகிடக்கும் கள்ளிச்செடிகளும், பரல் கற்களும் சூடுதாங்காது பொடியாகச் சிதறும் ஓசையும், முல்லை நிலத்திலே ஆயர்கள் ஊதுகின்ற குழலோசையும், மருத நிலங்களில் கரும்பை இயந்திரங்களில் பிழியும் ஓசையும், கப்பல்களில் பாய்களை விரிக்கும் நெய்தல் நில ஓசையும்.

249. இன்ன ஓசை இயம்ப நிலந்தொறும்
பன்னரும் பத்மசண்டமது எய்தினான்
மன்னும் சுற்றமெலாம்வரக் கொண்டுபோய்த்
துன்னினான் சீயபுரமது தோன்றலே.

இவ்வாறு பல ஓசைகளைக்கேட்டு ஒவ்வொரு நிலமாகக் கடந்து பத்மசண்டம் என்னும் சொல்லற்கரிய நல்ல நகரத்தைப் பத்திரமித்திரன் அடைந்தான். அடுத்துத் தன்னைச் சூழ்ந்த சுற்றத்தினரைச் சேர்த்து அழைத்துக்கொண்டு சீயபுரத்தைச் சேர்ந்தான்.

250. வழிவருத்தம் ஒழித்து அவன் வான்கிளைக்கு
அழிவிலாத இன்பத்தை அளித்திரீ இத்
தொழுதகை அமைச்சனைத் துன்னி நின்று
எழில் பெறச்சில இன்மொழி கூறினான்.

பயணக்களைப்பைப் போக்கியபின் தனது மிகப் பெரியச் சுற்றத்தினருக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் குறைவற அமைத்து இன்பமாக இருக்கச்செய்து அனைவரும் வணங்கிப் போற்றும் உயர்குணமுடைய பத்திரமித்திரன் அமைச்சன் சிரிபூதியை அடைந்து முகமனாக இன்மொழிகளைக் கூறினான்.

251. செப்பமும் புகழும் அறிவும் சிதைத்து
ஒப்பிலாத பிறப்பை உடைத்திடா
செப்பினன் மணிமேன் மனம்சிக்குணா
ஒப்பிலாத உரைப்பதற்கு ஊக்கினான்.

இந்நிலையில் அமைச்சனானவன் நடுநிலை தவறி தனது புகழையும், மேலான அறிவையும் கெடுத்து, இணையற்ற இம்மனிதப் பிறப்பின் மேன்மையை உடைத்து; மயங்கி, பத்திரமித்திரனது செப்பினுள் இருக்கும் மணிகளின்மேல் மனம் சென்று சிக்கியதான் சற்றும் தகுதியில்லாதவற்றைக் கூறுவதற்கு முற்பட்டான்.

252. மாயம் செய்த மரச்செப்பனை யவன்
மாயமில்லவன் தன்மணிச் செப்பினை
மாயம் செய்து கொளற்கு மனத்தெணா
மாயமே சிலவார்த்தையும் செப்பினான்.

மரத்திலே செய்யப்பட்ட இயங்கும் பாவைபோன்ற அமைச்சன், சற்றும் கலக்கமோ மயக்கமோ இல்லாமல் தெளிவான சிந்தையுடைய வணிகனின் மணிச்செப்பினை வஞ்சனையாகக் கவர்ந்துகொள்ள உள்ளத்தே முடிவு செய்து வஞ்சம் கலந்த வார்த்தைகளைக் கூறினான்.

253. எங்கு நீயுளை யாவன்நீ மற்றுநீ
எங்குப் போவதெனச் சொல ஏந்தலும்
வங்கம் மீது வந்து அன்று மணிச்செப்புத்
தம்கை தந்துபோம் வாணிகனான் என்றான்.

யார் நீ? எங்கிருக்கின்றாய்? எங்கே போகின்றாய்? என்று பத்திரமித்திரனை அமைச்சன் கேட்க, சிறந்தோனாகிய அவன், 'சில நாட்களுக்கு முன்பு கப்பலிலே வந்து எனது இரத்தினச்செப்பைத் தங்களிடம் ஒப்படைத்துச்சென்று இன்று வந்துள்ள வணிகன் நான்' என்றான்.

254. செப்பெனச் செப்பி யிட்டதென் செப்பென
ஒப்பி லாத மணிச்செப்பு வைத்தது
தப்பி லீர் மறந்திட்டதோ தானென
எப்ப டிப் பித்தனோ என்றுரைத்தனன்

அதைக்கேட்ட அமைச்சன், செப்பு அது, இது என்று செப்புகின்றாயே என்ன அது விவரமாகச் சொல் என; குற்றமற்ற தாங்கள் நான் தாங்களிடம் மணிச்செப்பினைக் கொடுத்ததை மறந்துவிட்டீர்களோ என, ஒரு பைத்தியக்காரனாக இருப்பாயோ என்று அமைச்சன் மேலும் கூறினான்.

255. என்றும் நானுனைக் கண்டறி யேன் இனி
மன்ற என்கை மணிச் செப்பு வைத்தநாள்
நின்ற சான்றுள தாகின்நீ காட்டினால்
ஒன்றும் அன்றி மற்றுன் னோடே போகுமே.

நான் என்றுமே உன்னைக் கண்டதில்லை. நீ கூறியபடி என்னிடம் செப்பினை வைத்ததற்குச் சான்றுளதாயின் நீ கூறுவது பொருந்தும் இல்லையேல் நீ கூறியதனால் பயனேதும் இல்லை என்றான்.

256. நன்று சாலவும் நம்பிநின் பேரினுக்கு
ஒன்றவே உரைத்தாய் செப்பு வைத்தநாள்
அன்றும் இன்றும் அலாது உளநாளினால்
என்றும் என்னை நீ கண்டதும் இல்லையே

உயர்ந்தவனே மிகவும் நன்று. உனது பெருமைக்கும், புகழுக்கும் பொருத்தமாகவே பேசுகின்றாய். செப்பினை உன்னிடம் ஒப்படைத்த அன்றும், திரும்பக்கேட்கின்ற இன்றும் தவிர மற்ற எப்போதும் நீ என்னைப் பார்த்ததில்லை.

257. சான்று வேண்டினும் சத்திய கோடராம்
ஆன்ற நீரன்றி யில்லை அன்று யாவர்க்கும்
தோன்றிடாமைத் தரவென்று சொன்ன நாள்
சான்று வேண்டும் சடத்தை அறிந்திலேன்.

அப்படிச் சான்று தேவைப்பட்டாலும் அதாவது நீர் கேட்டாலும் சத்தியக்கோடராகிய உம்மைத் தவிர வேறு சான்றில்லை. யாருக்கும் தெரியாமல் செப்பினைக் கொடு என்று சொன்னபோது இப்படிச் சாட்சி கேட்பாய் என்று நான் எண்ணியதில்லையே, (இப்படிமாறுவாய் என்ற ஐயமே இல்லை).

258. கணம தொன்றிலே கண்புதைத் திட்டழப்
பிணம தாகும்இவ் வாழ்க்கையைப் பேணுவான்
அணிகளாம் அறிவும் புகழும் கெட
மணிகள் மேல் மனம் வைத்த தோர்மாயமே.

கணநேரத்தில் கண்களை மூடிக்கொண்டு கதறும் வண்ணம் பிணமாக மாறக்கூடிய நிலையற்ற இந்த வாழ்க்கையைப் பெரிதும் விரும்பிய அவன் உண்மை அணிகளான உயர் அறிவு, புகழ் இவை கெடுமாறு இந்த மணிகள் மீது ஆசை கொண்டது எவ்வளவு அறியாமை.

259. செய்த நன்றி சிதைத்துஅறத் தேறினார்க்கு
எய்த வஞ்சனை செய்து பிறர்மனை
மையலால் மகிழ்வார்க்கு இந்த மண்மிசை
எய்திடாப் பழியின்மை அறியிரோ.

ஒருவர் செய்த நன்றியைச் சிதைப்பதும் முற்றும் நம்பியவர்களை மோசம் செய்வதும், பிறர் மனைவி மீது ஆசைகொண்டு சேர்ந்து மகிழ்வதும் ஆகிய இச்செயல்களைப் புரிவார்க்கு இவ்வுலகில் அடையும் பழியின் கொடுமையை அறியீரோ.

(வேறு)

260. பிறர் பொருள் வைத்தல் கோடல் பிறர் தமக் கீதல் மாற்றல்
மறமென அன்று சொன்ன வாய்மொழி மறந்திட் டீரோ
திறமலது உரைக்க வேண்டாம் செப்புக்கொண் டிருப்ப தன்றி
முறை முறைபித்த னாக்கி முடிந்தனீர் மோகத் தாலே.

பிறர் பொருள் மீது ஆசை கொள்வதும் அதைப் பறித்துக்கொள்வதும், பிறருக்குக் கொடுப்பதும் மாற்றிவிடுவதும் ஆகிய செயல்கள் மிகவும் பாபமாகும் என்று அன்று கூறியதை மறந்துவிட்டீர்களோ? மற்றும் எனதுமணிச் செப்பினைக் கவர்ந்து கொண்டதுமன்றி அளவுகடந்த ஆசையினாலே இப்படிப் பேச முற்பட்ட நீர் ஒவ்வொரு தடவையும் என்னைப் பைத்தியக்காரனாக்க முயல்கின்றீர்; நீதிக்குப்புறம்பானவற்றை இப்படிப் பேசவேண்டாம்; பேசாதீர்.

261. என்றலும் எழுந்த கோபத்து எறியெறி என்ன ஓடிப்
பொன்றுமாறு அடித்து நின்றார் புறப்படத் தள்ளப் போந்திட்டு
அன்றவன் அடித்துச் செப்புக் கொண்டதற்கு அவல முற்றுச்
சென்று அவன் தெருவு தோறும் சிலபகல் பூசல் இட்டான்.

என்று பத்திரமித்திரன் கூறியதும் அளவு கடந்த சினத்தனாகி இவனை அடிஅடி என்று ஓடிச்சென்று உயிர் போகும் வண்ணம் துன்புறுத்தி அடித்து வெளியில் தள்ளினர். அப்படி அமைச்சன் வருத்தியதற்கு மனம் நொந்து தெருவில் அலைந்து கீழ்கண்ட வண்ணம் பத்திரமித்திரன் முறையிடலானான்.

262. சத்திய கோடன் என்னும் சாதியால் வேதியன் தான்
வித்தத்தாற் பெரியன் தூயன் என்று யான் மிகவும் தேறி
வைத்த என் மணியைக் கொண்டு தருகிலன் மன்ன, கேண்மோ
பித்தனும் ஆக்கும் என்னைப் பெரும் பொருள் அடக்கு வானே.

அந்தணகுலத்தைச் சேர்ந்தவன், சத்தியகோடன் என்னும் சிறப்பினைப் பெற்றவன், அறிவில் மிக்கவன் தூய்மையானவன் என்றெல்லாம் மனத்தில் கொண்டு நம்பிக்கைக்குரியவன் என்று எனது மணிச் செப்பினை ஒப்படைத்தேன். ஆனால் அவற்றை ஏமாற்றியதோடன்றி என்னையும் பைத்தியக்காரனாக்கி எனது பொருளையும் பறித்துக்கொண்டான். மன்னனே இதைக் கேட்பாயாக என முறையிடலானான்.

263. தன்வழிக் குற்றம் காணாக் கண்ணெனத் தான்செய் குற்றம்
உன்னிடாது அவனைக் கோபித்து ஊர் வயிற் கடிய லுற்று
மின் எனக் கரக்கும் கள்ளர் தங்களை விட்டான் வீட்டில்
உன்னுதற் கரிய வாய பொருளெலாம் ஒருங்கு கொண்டார்.

இதையறிந்த அமைச்சன், தன்னிடமுள்ள குறையை அறியாத கண்களைப்போல் தான் செய்த குற்றத்தை உணர முடியாதவனாய் மேலும் கோபித்து அந்நகரத்தைவிட்டே வணிகனைத் துரத்தும் நோக்குடன் மின்னலைப் போல் விரைந்து பறித்துக் கொள்ளும் தேர்ந்த திருடர்களை அவனது இல்லத்திலே ஏவி அங்குள்ள உயர்ந்த பொருள்கள் அனைத்தையும் கவரச்செய்தான்.

264. பணமணிக்கு இரங்கு நாகம் பணத்தையும் இழந்த தேபோல்
துணி மணிக்கு இரங்கும் நாய்கன் தொடு பொருள் முழுதும் போகக்
குணமணி இலாத கோடன் கள்வன் என்பொருள் கொண்டான் என்று
அணிநகர் இரங்க ஆற்றப் பூசலிட்டு அவல முற்றான்.

தனது படத்திலிருந்த மணியை இழந்து வருந்தும் நாகம் மேலும் படத்தையே இழந்து துடிப்பதைப் போல் செப்பினை இழந்த வணிகன் இப்போது எஞ்சிய செல்வங்களையும் பறிகொடுத்துக் கலங்கினும் தளராது பண்பற்ற அமைச்சன் என்னும் திருடன் எனது

பொருளனைத்தையும் பறித்துக்கொண்டானே என் செய்வேன் எனக்கேட்பார் இரங்கும்படி மிகவும் வருந்தி முறையிட்டான்.

265. மன்னவன் அதனைக் கேட்டு மந்திரி தன்னைக் கூவி
என் இவன் உரைத்தது என்ன இறைவகேள் இவண் ஓர்பித்தன்
தன்னையான் அறிந்ததில்லை தருக என் மணிச் செம்பென்னாப்
பின்னைபோய் என்னைக் கள்வன் என்றிட்டான் பெரிய பூசல்.

அவனது அரற்றலைக்கேட்ட அரசன் அமைச்சனை அழைத்து வணிகன் ஒருவன் இவ்வாறு முறையிடக் காரணம் என் என்று வினவ; இறைவனே, இவன் ஒரு பைத்தியக்காரன். இவனை நான் எப்போதும் அறிந்ததே இல்லை, என்னிடம் வந்து எனது மணிச்செப்பைக் கொடு என்று கேட்டான். அடுத்து இப்போது என்னைத் திருடன் என்று சொல்லி அலறிக் கொண்டிருக்கின்றான்.

266. கருமமே இறைவ கேளாய் களவின் தன் விளைவை ஓதும்
தருமநூல் உரைக்கும் நானே தக்கில்லா களவு செய்யின்
ஒருவரும் உலகில் கள்ளர் அல்லவர் இல்லை என்னாப்
பெரியதோர் சபதம் செய்தான் அரசனும் பிறரும் தேற.

மன்னனே! நான் சொல்வதைக் கேளுங்கள்; திருட்டினால் விளையும் தீமைகளை உணர்ந்ததோடு அனைவர்க்கும் கூறும் நானே அக்கொடிய களவினைச் செய்யின், இவ்வுலகில் ஒருவரும் நல்லர் அல்லர் என மன்னனும் மற்றவர்களும் நம்பும் வண்ணம் ஆணையிட்டுக் கூறினான். (அரசனும் அமைதிபெற்றான்).

267. பறையன் இக்கள்வன் தன்னைப் பார்த்திபன் என்னைப் போல
மறையவன் என்று கொண்டான் சபதத்தால் வஞ்சிப்புண்டு
பிறரிவன் செய்கை ஓரார் என்னையே பித்தன் என்னக்
குறை யுண்டோ வென்று பின்னும் கூப்பிட்டான் நீதி ஓதி.

மிகக் கொடியோனாகிய இந்த அமைச்சனை நான் எப்படி நம்பி ஏமாந்தேனோ அதுபோல அரசனும் இவனை உயர்ந்த அந்தணன் என எண்ணி விட்டான். இவனது ஆற்றல் மிக்க உறுதி வார்த்தைகளை நம்பி உண்மை யறியாதவர்கள் என்னைப் பைத்தியக்காரனாக நம்பியதில் தவறென்ன? என்று எண்ணினாலும் மீண்டும் சென்று நீதி வேண்டி முறையிட்டான் பத்திரமித்திரன்.

268. சிறகமை பறவை பேர்ப்பான் உடம்பெலாம் செடியின் மூடிப்
பறவையைச் சிமிழ்ப்பின் வாங்கும் பாவியைப் போல நீயும்
மறையவன் அறிவன் என்னும் மாயத்து மறைந்து நின்றென்
பெறலரும் மணியைக் கொண்டாய் என்றவன் பேச லோடும்.

தமது உடல் முழுதையும் பசும் தழைகளால் மூடி மறைத்துக்கொண்டு அழகிய இறகினையுடைய பறவைகளைத் தங்கள் வலைக்குள் சிக்கவைக்கும் கொடியவர்களைப் போல, தன்னை அந்தணன் என்றும் அறிஞன் என்றும் மற்றவர் நம்பி மயங்கும் வண்ணம் நடித்து வஞ்சனை வேடத்தால் எனது பெறற்கரிய மணிகளைப் பறித்துக்கொண்டாயே என அமைச்சனைப் பழித்துக்கூறிய பத்திரமித்திரன் அரற்றலைக் கேட்டு (அமைச்சன்),

269. படுமதயானை விட்டும் பாசத்தின் நாயை விட்டும்
கொடி நகர் பேயன் தன்னைக் கடிக என்றமைச்சன் கூறக்
கடியவர் படியிற் கண்டு செய்வதற்கஞ்சி காலை
நெடியதோர் மரத்தின் ஏறி நித்தமாய் அழைத் திட்டானே.

மதயானையை ஏவியும் கொடிய நாய்களை அவிழ்த்து விட்டும், இந்தப் பைத்தியக்காரனை இந்த நகரத்தினின்றும் விரட்டுங்கள் எனக் கட்டளை இட, கொடிய

ஏவலர் அப்படியே செய்ய, அதற்கு அஞ்சிய பத்திரமித்திரன் மிகவும் உயர்ந்த மரத்தின் மீது ஏறி நாள்தோறும் பழையபடி முறையிட்டான்.

270. தூயநல் வேதம் நான்கும் சொல்லிய சாதியாதி
மேயநல் அமைச்சன் என்றும் விருதுமெய் உரைத்தல் என்றும்
தீயின் நற்றொழிலன் என்றும் தேறியான் வைத்த செப்பை
மாயநீ செய்து கொண்டால் வரும் பழி பாவம் அன்றோ.

ஓ அமைச்சனே! தூய வேதங்கள் நான்கினையும் உணர்ந்த நல்ல அந்தண வகுப்பைச் சேர்ந்த நல்லமைச்சன் என்றும், ஓமத்தீ மூலம் இறைவனை வழிபடும் ஒழுக்க முடையவென்றும் நம்பி நான் ஒப்படைத்த எனது மணிச் செப்பினை அபகரித்துக்கொண்டாயே இதனால் உனக்குப் பழியும் பாவமும் வந்து சேரு மன்றோ.

271. கொற்ற வெண்குடையும் சீய வணையும் சாமரையும் நீத்தால்
வெற்றிவேல் வேந்தனென்ன நீயென்ன வேறிலாதாய்
குற்ற மென்றறிந்தும் என்னகுறையில் என செப்பைக் கொண்டாய்
மற்றிதோ பூதி மாயமாகு மிவ் வையத்தையா.

(அரசனுக்கும் உனக்குமுள்ள வேறுபாடு) வெண்கொற்றக்குடையும் அரியணையும் கவரியும் தவிர உனக்கும் மன்னனுக்கும் என்ன வேறுபாடு? நீ செய்த காரியம் குற்றமுடையது என்பது உணர்ந்தும், எனது செப்பைக் கவர்ந்து கொண்டாயே உனக்கு என்ன குறையுளது? அமைச்சனே, உனது இச்செய்கை மிகவும் வஞ்சனையானது, கொடியது.

272. மறம் பழிசிறுமை நிந்தை வந்தெய்த மணியை வவ்வின்
அறம் புகழ் பெருமை சீர்த்தி அறிவொடு செறிவிலாக்கும்
மறந்து வைத்தூறு தொட்டு வைப்பினை வவ்வுவாரைத்
துறந்திடும் திரு என்றோதும் சுருதியும் விருத்த மாய்த்தோ.

யாரும் அறியாவண்ணம் வைத்த மணிச்செப்பினை அபகரித்துக்கொண்டால் பாவம், பழி, தாழ்மை இகழ்ச்சி முதலியவை வந்து சேரும்; அறம், புகழ், பெருமை, சிறப்பு, அறிவு ஆகிய இவை நம்மைச் சேராது ஒழியும் என்பதை அமைச்சன் அடியோடு மறுந்துவிட்டானே. இவ்வாறு பிறர் பொருளைப் பறித்துக்கொண்டவர்களை விட்டு விலகித் திருமகளும் நீங்குவாள் என நீதி நூல்கள் கூறுவதும் பொய்யாகிவிட்டதே.

273. வடிநுனைப் பகழிநூறும் மன்னரை மாயம் செய்திட்டு
அடுமதயானை வவ்வல் அமைச்சருக்கு ஆயவஞ்சம்
வடுவிலார் தேறித்தம் கைப்பொருளினை வைத்து வந்து
அடிமிசை உறங்கும் போழ்தில் வஞ்சிப்பான் அமைச்சனாமோ.

கூர்மையான அம்புகளைச் செலுத்தும் வலிமைமிக்கப் பகைஅரசர்களைத் தந்திரமாக அடக்கி அவருடைய மதம் மிக்கப் போர்யானைகளைக் கவர்ந்து வருதல் தான் அமைச்சர்களின் சூழ்ச்சித் திறனாகும். ஆனால் இந்தச் சத்தியகோடனைப் போல் குற்றமற்ற ஒருவன் நம்பிக்கையோடு அடைக்கலமாகக் கொடுத்த செல்வத்தை மீண்டும் வந்து வணங்கிக் கேட்கின்றபோது அவனை வஞ்சிப்பான் ஒரு அமைச்சனாவானோ?

274. மந்திரம் பயின்று சால வல்லவர் தமக்குப் பேய்கள்
மந்திரம் பூதி தன்னால் அன்றி மற்றொன்றில் தீரா
வெந்துயர் நரகத்துய்க்கும் வேகத்து மோகப்பேயை
மந்திரிபூதி நீயேன் தீர்த்திடாவாறு இதென்றான்.

மந்திரங்களைக் கற்றவர்கள் தங்கள் சக்தியினாலும், விபூதி மகிமையினாலும் பேய்களை ஓட்டுவார்கள் மற்றவற்றால் பேய்கள் நீங்கா அதுபோல், மந்திரியாகிய சிரிபூதியே

நரகத்தில் செலுத்தும் தீய ஆசையாகியப் பேயை உன்னிடமிருந்து நீ துரத்தாமைக்குக் காரணம் என்ன? என்றான்.

275. நீர்மையும் குணமும் நின்ற சாதியும் நிறமும் கல்விச்
சீர்மையும் சாருவாக அறிந்து நீ செய்யும் மாயம்
நேர்மை செய்து அரசன் கேட்ட நாளின்கண் நீங்கும் உன்றன்
கூர்மையும் குணமும் எல்லாம் காட்டுவன் கோட என்றான்.

சத்தியகோடனே! ஒழுக்கம், உயர்குணம், நல்லகுலம், புகழ், கல்வி, சிறப்பு முதலியவற்றைப் பின் பலமாகக் கொண்டு நீ செய்கின்ற இந்த வஞ்சனைச் செயலை எல்லாம், அரசன் நம் இருவரையும் ஒன்றாக வைத்து விசாரித்தால் விளக்கிக்காட்டி உனது தந்திரத்தையும் ஒழுக்கக் கேட்டையும் வெளிப்படுத்துவேன் என்றான்.

276. சொரிமதக்களிற்று வேந்தன் செவியுற நாளும் வந்துஇப்
பரிசினால் அழைப்பக்கேட்டும் பருவ ரலின்றி விட்டான்
சுரிகுழல் கருங்கட் செவ்வாய்த் துடியிடைப் பரவையல்குற்
தெரிவைமாது இராமத்தை சித்தத்து ஒன்று எழுந்ததன்றே.

நாள்தோறும் பத்திரமித்திரன் இவ்வாறு கூறக்கேட்டும், மதம் பொழிகின்ற யானைகளையுடைய வேந்தன் இதில் கருத்தின்றி இருந்துவிட்டான். ஆனால் சுருண்ட கூந்தலையும், கரிய கண்களையும், சிவந்த வாயினையும், மெல்லிய இடையினையுமுடைய அழகிய மாதேவி இராமதத்தையின் உள்ளத்தே இது குறித்த சிந்தனை எழுந்தது.

277. முன்பு பின்பு ஒன்றும் தம்மின் மலைவிலா மூர்த்தி நூல்போல்
பின்பு முன் பொன்ற என்றும் உரைக் கின்றான் தன்னைப் பித்தன்
என்பதொன்றன்று என்றெண்ணி அவனைத் தான் அழைத்து இராமை
முன்பு நின்று உருவக்கேட்டு போய் இன்னும் முறையிடென்றாள்.

முன்னுக்குப்பின் முரண்படாது கூறப்பட்டிருக்கும் இறைவனது ஆகம நூலைப்போல் சற்றும் வேறுபடாது பொருந்துமாறு ஒன்றைப் பற்றியே கூறுகின்ற இவனைப் பைத்தியக்காரன் எனச்சொல்வது தகாது; என்று அவனை அழைத்து அனைத்தையும் பத்திரமித்திரனிடமே கேட்டறிந்தாள். பிறகு நீ சென்று வழக்கம் போல் தொடர்ந்து முறையிடு என்று அனுப்பினாள்.

(வேறு)

278. வாளார் தடந்தோள் மன்னர் மன்னர்தம் செய்கை வன்போர்
தோளால் விலக்கி முறைகேட்டு அறம் போற்றல் ஆகில்
தாளாள நல்லான் இவன் தானிடும் பூசல் நாளும்
கேளாது ஒழிவான் இது என் அருள் என்று கேட்டாள்.

வாட்போரிலே சிறந்து விளங்கும் வலிமை மிக்க மன்னர்களது செயல், பகை வேந்தருடன் பொருது வெல்வதும், தனது குடிமக்களின் குறைகளைக் கேட்டு நீதி வழங்கிப்போற்றுவதுமாகும். அப்படி இருக்க, போர்த் தொழிலில் வல்லவரான தாங்கள் குற்றமற்ற நல்லவனான இவ்வணிகன் நாள்தோறும் முறையிடுவதைக் கேளாதிருக்கின்ற காரணம் யாது? அருள் செய்வீராக என அரசி வினவினாள்.

279. மத்தக்களிற்றான் அழைப்பான் மத்தன் என்ன மங்கை
நித்தம் வந்து அம்மரத்தப் பொழுது ஏறிநீதி
வைத்த வகையால் உரைப்பான் மத்தனல்லன் என்ன
முத்தன்ன பல்லாய் முறை நீ இது கேண்மோ என்றான்.

மதயானைகளையுடைய மன்னன் அதைக்கேட்டு அப்படி முறையிடுகின்ற அவன் ஓர் பைத்தியக்காரன் என்று கூற, நாள்தோறும் தவறாது குறித்த நேரத்தில் அதே மரத்திலே

இருந்து முன்பின் மாறாது நீதிவேண்டி முறைப்படி வேண்டுகின்ற ஒருவன் பைத்தியக்காரன் அல்ல என்றுரைப்ப, முத்து போன்ற அழகிய பற்களையுடைய தேவியே! அவனது முறையீட்டினை நீயே கேட்டறிவாயாக என்றான்.

(வேறு)

280. நீதியே படித்தான் போல அழைக்கின்றான் வழக்குநின்ற
வேதியன் செயலும் எல்லாம் விளக்குப்போல் காட்டவல்லன்
சூதுயான் பூதியோடு பொருதபின் என்னச் சொன்னாள்
யாது நீ வேண்டிற்றெல்லாம் இசைந்தனன் என்று சொன்னான்.

நீதிநூல்களைக் கற்றவனைப் போல் முறையிடுகின்ற வணிகனுடைய உண்மையான நிலையையும், அமைச்சனுடைய வஞ்சகச் செயலையும் விளக்கு போல் தெளிவாகக் காட்டுகின்றேன், வேந்தே! அதற்குத் தாங்கள்; நான் அமைச்சனோடு சிறிது நேரம் சூதாடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என வேண்டினாள், மன்னனும் உனது விருப்பப்படியே செய் என அனுமதித்தான்.

281. அரசன தருளினாலே மந்திரி அவனைக் கூவிப்
பெரிதுபோது அசதியாடிப் பின்னை ஒன்றைத் தொடங்கா
உரைசெய்தாள் சூதில் என்னோடு ஒப்பவரில்லை என்றே
அரசன் மந்திரியை நோக்கி அகோ பெரிதழகிது என்றான்.

அவ்வாறு அரசன் அருளியவுடன் இராமதத்தை அமைச்சனை அழைத்து சிறிதுநேரம் அவன் மகிழுமாறு மாயமாகப்பேசி பிறகு அவனை நோக்கி சூதாடுவதிலே எனக்கு நிகர் இல்லை என்றாள், இதைக் கேட்ட அரசனும் அமைச்சனை நோக்க தேவி கூறுவது மிகவும் வியப்பிற்குரியது என்றான்.

282. வரையெனச் செறிந்த மார்ப மந்திரி என்னை வல்லே
உரை ஒன்று முடிவு மெல்லை உடைப்பன் இப்போரில் என்னத்
திரைசெறி கடலம் தானை வேந்த யான் தேவி தன்னைப்
பொரவென்று பூட்டும் போழ்தே வெல்வன் இப்போரில் என்றான்.

மலைபோன்ற மார்பினையுடைய வேந்தனே இந்த அமைச்சரை ஒருசொல் சொல்வதற்குள் சூதிலே தோற்கச்செய்வேன் என்றாள்; இதைக்கேட்ட அமைச்சன், அலைவீசும் கடல்போன்ற படைகளையுடைய மன்னனே; சூதுக்குரிய காய்களை அமைக்கும் முன்பே தங்கள் தேவியை வென்று விடுவேன் இது உறுதி என்றான்.

283. முறை முறை சபதம் செய்ய அரசனும் முகிழ்முகிழ்த்துப்
பிறைநுதல் பேதை தன்பால் இருந்தனன் தேவி பின்னை
மறையவன் மார்பின் நூலும் நாம மோதிரமும் ஈறா
முறைமுறை வென்று கொண்டாள் மூர்ச்சியா வெய்துயிர்த்தான்.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் அமைச்சனும் தேவியும் சபதம் செய்வதைக்கண்ட அரசன் வியப்படைந்து பிறைமதி போன்ற நெற்றியை உடைய தனது மனைவியின் பக்கத்தே இருந்தான், சூது தொடங்கியது. அமைச்சனுடைய பந்தையப் பொருள்களை வரிசையாகக் கவர்ந்து இறுதியில், அவனுடைய பூணூலையும், முத்திரை மோதிரத்தையும் அரசி வென்றாள், அமைச்சன் செயலற்று பெருமூச்செறித்தான்.

284. மயிலொடு பொறாது தோற்ற வாளரிபோல மாழ்கிப்
புயலென மேனி வேர்ப்புப் பொடிப்ப அவன் இருந்த போழ்திற்
குயின்மொழி வென்று கொண்ட காட்டிச் செப்பு அதனை வாங்கும்
செயலெலாம் செவிலித்தாய்க்குச் செப்பிவிட்டு இனிதின் மீண்டாள்.

மயிலொடு போர் செய்து தோல்வி எய்திய சிங்கத்தைப் போன்று அமைச்சன் சோர்ந்திருந்த போது, குயில் போன்ற இனிய குரலுடைய இராமதத்தை அமைச்சனிடம் வென்று பெற்ற பூணூலையும், மோதிரத்தையும் அவனுடைய கருவூலப் பொறுப்பாளனிடம் காண்பித்து அவன் நம்புமாறுபேசி செப்பினைப் பெற்று வருமாறு, தனது செவிலித்தாயிடம் சொல்லி அனுப்பி விட்டு மீண்டும் அமைச்சன் இருக்குமிடமே வந்தாள்.

285. கரும்பை மென்றனைய தீஞ்சொல் காவலன் தேவி தாயாம்
நெருங்கிநின்று எழுந்த கொங்கை நிபுணமா மதியும் போகிச்
சுரும்பிருந்து உறங்கும் தொங்கல் அமைச்சன் தன் மாடம் துன்னி
விரும்பி வந்தடைந்த பண்டகாரிக்கு வேறு சொன்னாள்.

கரும்பைச் சுவைத்தது போன்ற இனிய சொற்களை உடைய அரசனது தேவி இராமதத்தையின் செவிலித் தாயாகிய நெருங்கிய தனங்களையுடைய 'நிபுணமமதி' என்பவள் சென்று வண்டுகள் உறங்கிக்கிடக்கும் மலர் மாலைகளை அணிந்த அமைச்சனது மாளிகையை அடைந்து, தன்னை நோக்கி வந்த கருவூலத்தலைவனிடம், ஆகவேண்டியதைக் கீழ்வருமாறு கூறினாள்.

286. சித்திரம் ஒத்த ராமதத்தையும் சீய சேனும்
சத்தியம் வைத்த நாமன் தன்னை முன் ஆணையிட்டுப்
பத்திரமித்திரன் செப்புண்டெனிற் கொடுக்க பார்மேல்
நித்தலும் இட்டபூசல் நெடும்பழி விளைக்கும் என்ன.

சித்திரைப்பாவை போன்ற இராமதத்தையும் சீயசேன மன்னனும் அமைச்சன் சத்தியகோடனிடம் உறுதிமொழி கொடுத்து பத்திரமித்திரனும் மணிச்செப்பு உன்னிடமிருந்தால் அதை கொடுத்து விடு, வைத்துக்கொண்டே இல்லை எனில் அவ்வணிகனது கதறல் உலகில் உனக்குப் பெரும் பழியைத் தரும் இதை உணர்வாயாக.

287. மத்தகம் ஒத்த திண்தோள் மந்திரி சொன்ன வார்த்தை
வித்தகர் உத்தமர்க்கும் வரும் பழி விலக்கல் ஆகா
பத்திரபாகுவல்லி பரதற்கும் பழி ஒன்றாயது
இத்தலத்து என்றும் நின்றது இந்திரோ பேந்திரர்க்கும்.

யானையினது மத்தகம் போன்ற திரண்ட தோள்களையுடைய அமைச்சன் இதற்கு என்ன கூறினான் எனின் இவ்வுலகில் மிகத் திறமைசாலிகளுக்கும் சிறந்தவர்களுக்கும் பழிவருமாயில் விலகல் அரிது, மிகச்சிறந்த பாகுபலி குமாரனும், பரதச்சக்கரவர்த்திக்கும், இந்திரர், உபேந்திரர் என்ற அரசகுமாரர்களுக்கும் தோன்றிய பழியானது எப்போதும் நிலைத்துவிட்டதல்லவா.

288. ஆதலால் என்கண் இன்று முளைத்த இப்பழியும் போகி
ஓதநீர் வட்டமெல்லாம் தடையின்றிப் படர்வது ஒன்றாய்த்
தீதிலாக் குணத்து வேந்தே செப்பு அவன்வைத்துப் போயிற்று
யாதும் நான் நினைந்திடாதே இல்லை செப்பென்று சொன்னேன்.

ஆகையால் எனக்கு இப்போது தோன்றிய பழியும், அவர்களுக்கு நேர்ந்தது போலவே கடல் சூழ்ந்த இவ்வுலகில் பரவலாயிற்று உயர் குணமுடைய வேந்தே அந்த வணிகன் என்னிடம் ஒப்படைத்த செப்பினை மறந்து சித்தனையின்றி அவன் வந்து கேட்டபோது இல்லை என்று சொல்லிவிட்டேன்.

289. நினைத்தபின் சத்தியகோடன் என்பது நீங்கும் என்றென்
வினைப்பயன் பெருமையாலே கொடுத்திலன் வேண்டவன்றிச்
சினக்களிற்றுழவ மற்றவன் திருவுள்ளம் இருக்க வையத்து
எனக்கொன்றும் அரியதில்லை இனிச்செய்வது உரைக்க வென்றான்.

பிறகு நினைவிற்கு வந்தது. மீண்டும் கொடுத்தால் எனது புகழுக்கு இழுக்கு வரும். சத்தியகோடன் என்ற பெருமை போய்விடும். எனவே இல்லை என்றே சொல்லிவிட்டேன். இது எனது வினைப்பயன், உனது அருள் இருக்குமானால் இவ்வுலகில் எனக்கு அரியது ஒன்றுமில்லை; இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும் என்பதை சொல்லியருளுங்கள் என்றான்.

290. மன்னவன் அதனைக்கேட்டு வரும்பழி விலக் கொணாவே
என் உனக்கு இங்கு வந்த பழியொன்றுமில்லை ஈண்டு அம்
மின்மணிச் செப்பை ஈந்து வணிகனை வேண்டிக் கொள்வேன்
முன்னை என் பித்துத் தீர்த்தான் முனிவன் என்று உரைக்கவென்றே.

அதைக்கேட்ட அரசன், ஒருவருக்குப் பழி நேருமாயின் அதைக் போக்குவது கடினம், ஆனால் உனக்குப்பழி ஒன்றுமில்லையே, அந்த அழகிய மணிச்செப்பினை வணிகனிடம் கொடுத்து தனக்கு இதுவரை பைத்தியம் பிடித்திருந்தது; அதனால் தான் அவ்வாறு முறையீடு போல் பிதற்றினேன், ஒரு முனிவர் அருளால் பைத்தியம் தீர்ந்தது என்று கூறும்படி பத்திரமித்திரனை வேண்டிக்கொள்கிறேன். எனவே உனக்குப் பழி ஏதும் நேராது என்றான்.

291. மந்திரி நன்று இதென்று வரைபுரை மார்பின் நூலும்
தன் பெயரங்கித்திட்ட ஆழியும் தந்து செப்புக்கு
உன் கணின்று என்னை விட்டான் ஒருவரும் அறியாவண்ணம்
என் கையில் செப்பைத் தாவென்றுரைத்துக் கொண்டினிதின் மீண்டாள்.

நன்று என்று ஒப்புக்கொண்ட அமைச்சர் மலைபோன்ற தனது மார்பில் அணிந்திருந்த பூணூலையும் தனது பெயர் பொறித்த மோதிரத்தையும் அடையாளமாகக் கொடுத்து உன்னிடம் காட்டி மணிச்செப்பினை வாங்கி வருமாறு என்னை அனுப்பினார், எனவே யாரும் அறியாவண்ணம் செப்பினை என்னிடம் தருக என வாங்கிக் கொண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் நிபுணமாமதி திரும்பினாள்.

292. மந்தித்த நோக்கத்தால் இம்மண்ணெலாம் வணக்க வல்லாள்
சிந்தித்து ஒன்று உரைத்துச் செய்யின் தேவரும் பிழைக்க மாட்டார்
வந்திக்காரர்க்கு மூத்தான் வைத்த செப்பு அதனை வாங்கித்
தந்திட்டார் முகத்தை நோக்கா தாமரைக் கிழத்தியன்னாள்.

தனது மயக்கும் கூர்த்த பார்வையினாலே உலகத்தவர்களைத் தன்வயப்படுத்தும் 'நிபுணமதி' சிந்தித்து ஒரு செயலைச் செய்யத் தொடங்கினால் விண்ணவர்களையும் வென்றுவிடுவாள், அவள் மோசக்காரர்களில் மூத்தவனாகிய அமைச்சனால் கவரப்பட்ட மணிச்செப்பினைப் பெற்றுக்கொண்டு அரசிடம் கொடுத்தாள், தாமரை மலர் போன்ற ராமதத்தா தேவியானவள் அப்பொழுது தனது செவிலியை நோக்கி.

293. முடிந்தது இக்கருமம் என்னா முறுவலித்து அவளோடும் போய்
படம் கிடந்தல் குல்பாவாய் பட்டது பகர்க என்ன
நுடங்கு நுண்ணியடையாய் நீ நுவலிய நினைத்துப்போகி
மடங்கல்போல் இருந்த இந்த மத்திரிமாடம் புக்கேன்.

சென்றகாரியம் முடிந்துவிட்டது என மிகவும் மகிழ்ந்து முறுவலித்து, அவளுடன் தனியே சென்று பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய பாவாய்; நடந்தது அனைத்தையும் சொல் என்று வினவ; அசையும் மெல்லிய இடையையுடைய தேவியே; நீ கூறியவற்றைச் செய்து முடிக்கும் முறையைச் சிந்தித்த வண்ணம் சென்று சிங்கத்தைப்போன்ற இந்த அமைச்சனின் மாளிகை அடைந்தேன்.

294. புக்கபின் பாண்டகாரி புலிஒப்பான் மெலியும் வண்ணம்
ஒக்க நீ உரைத்தவெல்லாம் உரைத்து அடையாளம் சொல்லி
மிக்கவன் வெகுளி மார்பின் நூலும் மோதிரமும் காட்டித்
தக்கது ஒன்றுரைத்த பின்னைத்தந்த செப்பு இது என்றிட்டாள்.

மாளிகையை அடைந்து புலிக்கு நிகரான அந்தக் கருவூலத்தலைவன் நம்புமாறு நீ கூறியதை எல்லாம் பொருத்தமாக உரைத்து அடையாளத்துடன் வந்திருப்பதையும் கூறி சினம் மிக்க அமைச்சனின் பூணூலையும், மோதிரத்தையும் காட்டி மேலும் சிலவற்றை எடுத்துரைத்தபின், அவன் கொடுத்த மணிச்செப்புகள் இவை எனக்கூறி ஒப்படைத்தாள்.

(வேறு)

295. கறந்தபாலும் முலைபுகும் நீகருதின் என்று பெரியவர்கள்
நிறைந்தமதிபோல் முகத்தாயை நிபுணமதி என்று உரைத்தார்கள்
அறிந்தோர் சொல்லும் பொய்யாமோ வறிய காலன் பால் உயிர்போல்
இறந்த பொருளைக் கொடுவந்தாய்க்கு என் நான் செய்வது என உரைத்தாள்.

இராமதத்தைப் பெரிதும் மகிழ்ந்து, நிபுணமதியை நோக்கி, நீ நினைத்தால் கறந்த பாலையும் மீண்டும் மடி புகும்படி செய்துவிடுவாய் என்பதை உணர்ந்த அறிஞர்கள் தாம் மதிபோன்ற முகமுடைய உனக்கு 'நிபுணமதி' என்று பெயர் வைத்தார்கள். அறிவுடையோர் சொல் பொய்க்குமோ! கொடிய யமன் வாயில் சிக்கிய உயிரைப்போல் இனி மீளாது என்னும்படி இழந்த இப்பொருளை மீட்டுவந்தாய். இதற்கு ஈடாக நான் என்ன செய்யமுடியும் எனப் புகழ்ந்துரைத்தாள்.

296. மந்தாரத்தை வந்தணையும் வல்லிபோல் மன்னவனைச்
சந்தார் முலையாள் வந்தணுகித் தன்கைச் செப்புக் காட்டுதலும்
கந்தார் களிற்று வேந்தன் தன் கையை மறியாக் காரிகையைச்
சிந்தாமணியோ நீ யென்றான் சிறைவண் டெழுந்த முடியானே.

கற்பக மரத்தைச் சேரும் அழகிய கொடியைப் போல கச்சணிந்த இராமதத்தை மன்னனை நெருங்கி, தான் மீட்டுவந்த மணிச்செப்பினைக் காட்டவும், கட்டுத்தறிகளில் பிணிக்கும் யானைக்குத் தலைவனாகிய வேந்தன் மிகவும் வியப்பெய்தி அகங்கையில் புறங்கையால் மெதுவாகத்தட்டி தனது அழகிய தேவியை நோக்கி, வண்டுகள் மொய்க்கும் மலர்மாலையுடைய முடியணிந்த வேந்தன், நீ சிந்தாமணியோ எனப்போற்றி வியந்தான்.

297. மன்னவன் செப்பைக்காணா மற்றிவன் அமைச்சனாக
முன்னம் என் அரசு சென்றபடியிதோ என்று நக்குஆங்கு
அன்னம் மென்னடையினாளை மந்திரித்து ஆகவென்னாச்
சொன்ன அவ்வணிகள் தன்னைச் சோதித்தற்கு உள்ளம் வைத்தான்.

சீயசேனன் அச்செப்பினை நோக்கி இந்தச் சத்தியகோடனை அமைச்சனாகக் கொண்டு நடைபெற்ற எனது ஆட்சியின் நிலை இத்தகையதோ என்று துன்ப முறுவல் கொண்டு, எல்லாம் நன்மையாகவே ஆகட்டுமென்று எண்ணியவனாய் அன்னம் போன்ற இனிய நடையினையுடைய இராமதத்தையோடு ஆகவேண்டியதைப் பற்றி யோசித்து பத்திரமித்திரனைச் சோதிக்க முடிவு செய்தான்.

298. மணிச்செப்பு நல்ல வல்லே தருகென வந்த வற்றில்
குணிப்பற்ற மணியை வாங்கி வணிகன் தன்மணியில் கூட்டிப்
பணித்தனன் வணிகன் தன்னை அழைக்கென பணிந்து நின்றான்
இணைத்த நா வளைத்துச்சீறும் பன்னகர்க்கு இறைவ என்றான்.

அரசன் உடனே தனது கருவூலத்தலைவனை அழைத்து மிகச்சிறந்த மணிச்செப்புக்களைக் கொண்டுவரச் செய்து அவற்றிலிருந்து ஒப்பற்ற மணிகள் சிலவற்றை வணிகன் மணியுடன் கலந்து வைத்து, பிறகு வணிகனை அழைத்து வரச்செய்ய பத்திரமித்திரனும் மன்னனைப் பணிந்து நின்றான் என்று தரணேந்திரனை நோக்கி,

பிளவுபட்ட நாவினை வளைத்துச் சீரும் நாகர்களின் தலைவனே! (என ஆதித்யாப தேவன் கூறினான்).

299. கச்சட்ட முலையினாளும் வேந்தனும் வணிக கண்ட
இச்செப்பில் உன்செப்பு உண்டேல் இயம்பு நீ என்னலோடும்
மெய்ச்செப்பும் மொழியினானும் வேந்தனை வணங்கிப்பாரா
இச்செப்பு என் மணிச்செப்பென்றான் எரிமணிக் கடகக்கையான்.

கச்சணிந்த அரசியும், வேந்தனும் பத்திரமித்திரனை நோக்கி, வணிகனே; இங்கேயுள்ள மணிச்செப்புகளில் உன்னுடைய செப்பு இருக்கின்றதா பார்த்துச்சொல் என்று கூற மணிக்கடகத்தினை அணிந்த பத்திரமித்திரனும் அவற்றை நோக்கி இது என்னுடைய செப்பு என்று அரசனை வணங்கிக் கூறினான்.

300. உரைத்தவன் தன்னைப் பாரா மன்னன் முன் இவனை ஒரும்
பிரத்தயம் இன்றி நின்றார் பித்தெனப் பித்தன் என்னா
உரைத்த என் அரசு சென்ற நிலத்தவர் உற்ற துன்பம்
மரக்கலத் தவர்க்கு நாய்கன் வாரியின் மடிந்த தென்றான்.

சரியாகக் கூறிய பத்திர மித்திரனை நோக்கிய மன்னன், இதற்கு முன் இவ்வணிகனை ஆய்ந்து அறியாது போன எனது ஆட்சியிலுள்ளவர்கள் இதுவரை அனுபவித்த துன்பம் கடற்பயணத்திலே கப்பல் தலைவன் கடலில் விழுந்து இறக்க மற்றவர்கள் அடைந்த துயரத்திற்கு நிகரானதாகும் என்றான்.

301. பத்திரமித்திரா உன் சித்திரமணிச் செப்பிட்ட
முத்திரை உன்னதாகில் வைத்திடல் கொண்டு போக
அத்திரம் உற்று யானை மத்தகம் அறுக்கும் மன்னா
முத்திரை என்னதன்று வித்தகர் இட்ட தென்றான்.

பத்திரமித்திரனே உன்னுடைய அழகான மணிச்செப்பிலே பொறிக்கப்பட்டிருக்கும் முத்திரை உன்னுடையதானால் நீ எடுத்துச்செல்லலாம் தடையில்லை என அரசன் கூறவும், அம்புகளைத்தொடுத்து யானைகளின் மத்தகத்தைப் பிளக்கும் மன்னனே இந்த முத்திரை நான் வைத்ததல்ல. யாரோ திறன்மிக்கவர்களால் வைக்கப்பட்டது என்றான்.

(வேறு)

302. திறவெனத் திறந்து பார்த்திட்டு
இறைவ மற்று என்ன வல்லா
அறிவரு விலைய கற்கள்
நிறையவும் கிடந்த வென்றான்.

அதுகேட்ட அரசன் சரிசெப்பினைத்திற என்று கூற திறந்து பார்த்த வணிகன், இறைவனே; செப்பினுள் என் மணிகளுடன் மதிப்பிடற் கரியவேறு மணிகளும் கலந்துகிடக்கின்றன என்றான்.

(வேறு)

303. மண்ணின் மிக்க இம்மணியை நின் மணியொடு கலக்கும்
மண்ணை தான் உளனோ அறியாது நீ உரைத்தாய்
எண்ணிலா விலை இம்மணித் தன்மையைப் பார்க்கும்
கண்ணும் ஓடின காண் எனக் காவலன் உரைத்தான்.

மீண்டும் மன்னன் வணிகனை நோக்கி நீ தெரியாமல் கூறுகின்றாய், இவ்வுலகில் மிகச்சிறந்த மணிகளை உனது மணிகளுடன் கலந்துவைக்கும் பேதையும் உளனோ, விலைமதிப்பற்ற பெருமைக்குரிய இந்த மணிகளைப்பார்த்து உனது கண்கள் தடுமாறுகின்றன. இப்போது அமைதியாகக் காண்பாயாக என்றான்.

304. மத்தனல்லவன் கருமத்தின் வரும் பயன் தெரிந்து
சித்தம் வைத்தலால் செய்வதோர் தொழில் வையத்து இல்லை
வைத்த என் மணிமறந்து வைகலும் அழைத்தேனேல்
பித்தன் என்றெனை யழைத்தவர் பிழைத்ததென் பெரியோய்.

மிகச்சிறந்த வேந்தனே இவ்வுலகில் மனக்கலக்கமற்ற ஒருவன் தனது செயல்களால் விளையும் பயனை ஆய்ந்து சிந்தியாது எதையும் செய்வதில்லை. நான் அமைச்சனிடம் வைத்த மணிகளை மறந்துவிட்டு நாள்தோறும் முறையிட்டிருப்பின் என்னைப் பித்தன் என்று கூறியவர்கள் செய்த பிழை யாது? ஒன்றுமில்லையே. நான் பைத்தியமேயாவேன் என்றான்.

305. இப்பரிசு உரைத்துச் செப்பில் இட்டமாமணியை எல்லாம்
செப்பரும் பரிசு நீக்கிச் செழுமணி கையில் கொண்டான்
மெய்ப்பரிசறிந்து தன்மை கைக்கொண்டு பிறிதுவிட்ட
அப்பிரமத்தனாய முனியைப்போல் வணிகன் நின்றான்.

இவ்விதம் கூறிய பத்திரமித்திரன், செப்பிலிருந்த மணிகளை ஆய்ந்து அனைவரும் வியப்பெய்தும் வண்ணம், மற்ற மணிகளை நீக்கித் தனது ஒப்பற்ற மணிகளைக் கைக்கொண்டான். இப்போது வணிகன் உயர்பொருளை உணர்ந்து மேற்கொண்டு ஒவ்வாதகுணங்களை ஒழித்த 'அப் பிரமத்த' நிலை எய்தி ஆறாம் குணத்தானத்திலே நின்ற முனிவனுக்கு நிகராக விளங்கினான்.

306. மணியிவை சிறிது பூதி வைத்தனவாகும் உன்னைக்
குணியிலான் செய்த குற்றம் தீர நீ கொண்டிடு என்ன
அணியிலா மகளிர் போலப் பிறன் பொருள் கொண்டு வாழும்
பணியிலேன் அரச என்றான் பருமணி வயிரத்தோளான்.

வணிகனே! உன்னால் ஒதுக்கப்பட்ட இந்த ஒருசில மணிகள் அமைச்சனால் சேர்க்கப்பட்டவை ஒழுக்கமற்ற அவன் செய்த குற்றத்திற்கீடாக நீ இவற்றை எடுத்துக்கொள் என்று அரசன் கூறவும், வைரம் போல் உறுதியான தோள்களையுடைய பத்திரமித்திரன் அரசே ஒழுக்கமற்ற பொதுமகளிரைப் போல் பிறருக்குரிய செல்வத்தைக் கொண்டு வாழும் வாழ்வை விரும்பேன் என்றான்.

307. மன்னிய சுத்தமில்லான் பொருளினை வலிதின் வாங்கி
இந்நிலவரைப்பின் என்றும் நின்றிடும் பழியும் எய்தி
மின்னினும் கடிது வீயும் யாக்கையும் கிளையும் ஓம்பல்
மன்னவ பெரிய தொன்றோ மக்கள் இப்பிறவிக் கென்றான்.

வேந்தனே! மனத்தூய்மை இல்லாது பிறருக்குரிய பொருளை முறைதவறி அபகரித்து இவ்வுலகில் எப்போதும் நிலைத்து நிற்கும் பழியை எய்தி, மின்னலைக் காட்டிலும் விரைந்து அழியும் இந்த உடலையும் உறவினர்களையும் பாதுகாத்தல் பெறற்கரிய இம்மனிதப் பிறவிக்குச் சிறந்த செயலோ! என்றான்.

308. தானத்திற்கு உரித்தும் அன்று தன் கிளைக்கு ஈயல் சால
ஈனத்துள் உய்க்கும் நிற்கும் எச்சத்தை இழக்கப் பண்ணும்
மானத்தை அழிக்கும் துய்க்கில் மற்றயவர்க்கு அடிமையாக்கும்
ஊனத்து நரகத்துய்க்கும் பிறன்பொருள் உவக்கின்வேந்தே.

வேந்தே! விரும்பி ஏற்கின்ற அத்தகு செல்வம் பிறருக்கு ஈவதற்கும் உரியதன்று, தனது உறவினர்களுக்கு உதவினாலும் இழிவையே தரும். நமது மக்களையே இழக்கச் செய்யும், பெருமையை அழிக்கும். அனுபவித்தாலும் பிறருக்கு நம்மை அடிமையாக்கும் முடிவில் நரகத்தில் கொண்டு செலுத்தும் என்றான்.

309. பேறு இழவு இன்பம் துன்பம் பிணி பகை பிறப்பு இவற்றின்
ஆறுதான் முன்பு செய்த வினை வழி வருவதல்லால்
வேறு ஒன்றால் ஆவதுண்டோ வினை என்பால் நின்றதொன்றால்
மாறின்றாய் நின்றதல்லால் மற்று இவன் செய்வதுண்டோ.

வணிகன் அரசனை நோக்கி மேலும் கூறுவான் இப்பிறப்பிலே நாம் அடைகின்ற ஊதியமும், இழப்பும் இன்ப துன்பங்களும், நோயும், பகையும் ஆகிய இவை அனைத்தும் நாம் முற்பிறவியிலே செய்த வினைவழியே வருகைதருவதன்றி வேறு ஒன்றால் ஆவதில்லை. எனவே நான் முன்பு செய்த வினை இதுவரை இருந்து இப்போது பயன் தருகின்றது. அதனால் தான் எனக்கும் அமைச்சனுக்கும் இப்பிறப்பில் மாறுபட்டநிலை தோன்றி இத்தகு அனுபவங்களைக் கொடுத்தது இதைத் தவிர்த்து அமைச்சனால் செய்யப்பட்டது வேறு என்ன இருக்கின்றது என்றான்.

310. நீதிநூல் ஓதுவான் போல் நின்று அவன் அன்று சொன்ன
தீதிலா மொழியைக்கேளா திண்திறல் சீயசேனன்
வேதவாணிகனோ நீதி நூல் கண்ட வேந்தனோ இக்
கோதிலாக் குணத்தினான் என்று உவந்தனன் இருந்து சொன்னான்.

நீதி நூல்களைக் கற்றுணர்ந்துக் கூறுகின்றவனைப் போல் பத்திரமித்திரன் கூறிய தீதற்ற சொற்களைக்கேட்ட வலிமையும், வீரமும்மிக்க வேந்தன் சீயசந்திரன் மிகவும் மகிழ்ந்தவனாய், குற்றமற்ற இந்த வணிகன் வேதமுறைகளை வணிகம் செய்பவனோ! அன்றி நீதி நூல்களைக் கற்றுச்சிறந்த வேந்தனோ என வியந்து மேலும் கூறினான்.

311. வையகம் பெறினும் பொய்யா வாக்கினன் மரணம் வந்தால்
உய்யலாம் மருந் தென்றாலும் பிறன் பொருட்டு உள்ளம் வையான்
தையலாய் தரும நீதி சமநிலைதயா ஒழுக்கம்
வையகம் தன்னில் இந்த வணிகனாய் வந்த என்றான்.

இராமதத்தையே இவ்வணிகன் இவ்வுலகமே கிடைப்பதாயினும் பொய்யுரையாதவன். தனக்கு இறுதி நேர்ந்த காலத்து இந்த மருந்தை உண்டால் பிழைக்கலாம் என்றபோதும் மற்றவருக்குரிய அந்த மருந்தின்மீதும் ஆசை கொள்ளமாட்டான் அறநெறி சமநிலை, தயவு-உயர் ஒழுக்கம் இவையனைத்தும், இவ்வணிகனாய் உருவெடுத்து உலகத்தில் வந்ததோ எனக் கூறினான்.

312. என்றலும் தேவி வென்ற வாதிகன் பக்கத்தார் போல்
நின்றனள் உவகை நெஞ்சின் நிறைந்தனளாக நீதிக்
கொன்ற அப்பூதி தன்பால் கோன் செட்டிப் பட்டம் தன்னை
மன்றுலாம் தொங்கல் வேந்தன் வணிகனுக்கு ஈந்து சொன்னான்.

என்று அரசன் மகிழ்ந்துரைத்ததைக் கேட்ட இராமதத்தை வழக்கொன்றைத் தொடுத்து வெற்றியெய்திய வாதியின் சார்பில் இருந்தவர்களைப்போல் உவகையெய்தி மனம் நிறைந்திருந்தாள். அடுத்து நீதியை அழித்த அந்த அமைச்சன் சிரிபூதி பெற்றிருந்த கோன் செட்டி என்னும் சிறப்புமிக்க பட்டத்தை மாற்றி வணிகனுக்கு அளித்து மணம்மிக்க மாலையை அணிந்த மன்னன் மேலும் கூறினான்.

313. மணிகளும் பொன்னும் முத்தும் வயிரமும் பிறக்கும் பூமி
மணிகளும் பொன்னும் முத்தும் வயிரமும் அடக்கும் மாடம்
மணிகளும் பொன்னும் முத்தும் வயிரமும் வடித்துச் செய்த
அணிகளும் துகிலும் சந்தும் அல்லவும் கைக் கொள் என்றான்.

பத்திரமித்திரனே! மணிகள், பொன், முத்து, வயிரம் முதலியவை தோன்றும் இடத்தையும் அவைகள் நிறைந்த மாளிகைகளையும், அவைகளால் ஆக்கப்பட்ட அணிகளையும், மேலான ஆடைகளையும், சந்தனம் போன்றவற்றையும் மற்றும் இது போன்ற உயர் பொருள்கள் பலவற்றையும் ஏற்றுக்கொள் என்றான்.

(வேறு)

314. இடம் பெரிது டையவர் பழியில் காரியம்
தொடங்கிய முடித்தலால் விடார்கள் என்பது
மடங்கல் போல்இன்று இந்த வணிகன் மந்திரி
இடஞ்சலைக் கடந்து இதுமுடிந்த தென்றனர்.

இதை அறிந்த மக்கள் உண்மை மிக்க உறுதியானவர்கள் எடுத்த காரியத்தை முடித்து வெற்றி பெறாது சோர்வடைய மாட்டார்கள் என்ற உண்மை, இந்த அமைச்சனது கொடுஞ் செயல்களை எல்லாம் சிங்கத்தைப்போல் எதிர்த்து வென்ற இந்த வணிகனால் உறுதிசெய்யப்பட்டுள்ளது எனப் புகழ்ந்துரைத்தனர்.

315. மத்தமால் களிறு போகும் வழியினைக் குறித்து மாணப்
பொய்த்தரை செய்து வீழ்த்துப் பிடித்திடும் புலையன் போலச்
சத்தியகோடன் என்னும் சடத்தினால் தன்னைத் தேற்றி
வைத்து இந்த வையத்தோடும் வஞ்சித்தான் என்னை என்னா.

மதம் மிக்க பெரிய யானை செல்லுகின்ற வழியில் குழியைப் பறித்து அது தெரியாமல் மூடி மறைத்துத்தரை போலச் செய்து யானையை அதில் விழச் செய்து பிழைத்திடும் கீழ் மக்களைப் போல், சத்தியகோடன் என்னும் சிறப்பினால் தன்னை நம்பச் செய்து இவ்வுலகத்தவரையும், வேந்தனான தன்னையும் ஏமாற்றிவிட்டானே என மன்னன் சிந்தித்தான்.

316. கோபியா அரசுநீதிக் குறைபடா வகையினால்மா
பாவியாம் இவனை நூலின் படியினால் கடிக என்ன
நாபிகாலத்தின் இப்பால் நடக்கின்ற வழக்கு நூலின்
தீபிகா மனத்தினார்கள் செய்வது தெரிந்து சொன்னார்.

உடனே அரசன் பெரிதும் சினமடைந்து மிகவும் தீயோனாகிய இந்தச் சத்தியகோடனை அரச நீதியில் கூறியதற்குச் சற்றும் குறையாமல் கடுமையான தண்டனையைக் கொடுங்கள் எனக் கட்டளையிட சட்ட நுணுக்கங்களை மிகவும் தெளிவாக விளக்குபோல் அறிந்த அமைச்சர்கள் நாபி மாமன்னன் காலம் முதல் இன்றுவரை வழக்கில் இருக்கும் சட்டத்தை உணர்ந்து கூறினார்கள்.

317. மடித்து வாய்கடித்து மல்லர் முப்பது சவட்டை திண்தோள்
எடுத்திடா அடித்து எருத்தின் சாணம் முத்தாலம் தீற்றிப்
படைத்த மாடனைத்தும் கொண்டிட்டு இப்பதி நின்றும் போக
அடித்தலாம் தண்டம் என்றார் அரசன் அப்படிச் செய்க என்றான்.

அரசனே இதற்கு தண்டனை யாதெனில் மல்லர்கள் சினத்துடன் உதடுகளை மடித்துக் கடித்துத்தங்கள் வலிய கைகளில் சவுக்கினைக் கொண்டு முப்பது அடிகள் கொடுத்து, எருதின் சாணத்தைக் கரைத்து மூன்று சட்டிகளைத் தலையில் ஏற்றி, அவன் சேர்த்த செல்வங்களைப் பறிமுதல் செய்து, பிறகு இந்நகரத்தின்றும் அடித்துத் துரத்திவிடுதல்தான் உரிய தண்டனையாகும் எனக் கூறவும், உடனே அவ்விதமே செய்யுங்கள் என்று காவலர்க்கு வேந்தன் கட்டளை பிறப்பித்தான்.

318. குனிசிலைக்கடவுள் போலும் கொற்றவன் குறிப்பை நோக்கா
பணையின் வெஞ்சிலைகள் ஏந்திப்பாடி காப்பார்கள் சூழ்ந்தார்
நினைவரும் பெரிய செல்வம் நினைப்பதன் முன்னம் நீ றாய்ப்
பனியின் முன் மலர்ந்த செந்தாமரைத் தடம் போன்றதன்றே.

வளைந்த கரும்பு வில்லினையுடைய காமனைப் போன்ற அழகு மிக்க வேந்தனது கட்டளையை உணர்ந்த கொடிய வில்லை ஏந்திய படைக்குழுவினர் ஒன்று சேர்ந்து

அமைச்சனது எண்ணற்ற செல்வத்தைக் கவர்ந்து சில நொடிகளில் அவனை ஒன்றும் இல்லாமல் செய்தார்கள். பனியால் மூடிய தாமரைக் குளம் போல் பொலிவிழந்து நின்றான் அமைச்சன்.

319. மலைமிசைச் சிங்க ஏற்றை வருத்தும் மான் கன்று போலத்
தலைமிசைச் சவட்டையிட்டுச் சாணகம் தீற்றியிட்டார்
புலையர் சென்று அவனைச் சூழ்ந்துபோகென உரைப்பச்சுற்றம்
அலைகடல் கவிழ நாவாய் அவருற்றது உற்றதன்றே.

மான்குட்டிகள் ஒன்று சேர்ந்து ஒரு மலை உச்சியிலே ஆண்சிங்கம் ஒன்றை வாட்டி வதைப்பதுபோல் படை வீரர்கள் அமைச்சனை சவுக்கால் அடித்துச் சாணக்குழம்பைத் தலைமேல் ஊற்றியபின், மிகவும் இழிந்தவர்கள் அவனைச் சூழ்ந்து நகரத்தைவிட்டு ஒடு எனக் கூறக் கேட்ட அமைச்சனது சுற்றத்தினர் அடைந்த துயரமானது அலைகடலிலே கப்பல் கவிழ்ந்த போது கப்பலில் இருந்தோர் உற்ற துயரத்திற்கு நிகராக இருந்தது.

320. முன்பகல் தேவன் என்று மொய்த்துடன் புகழப்பட்டான்
பின்பகல் பேயன் என்று பின் செலாது இகழப்பட்டான்
அன்புறும் இளமை மூப்பில் அரிவையர்க்கு ஒருவன் ஒத்தான்
முன்புதான் செய்து வந்த விதிமுறை உதயத்தாலே.

அன்று காலை அமைச்சன் அரசவைக்குச் செல்லும்போது மற்றவர்களால் தேவன் என்று புகழப்பட்டான். ஆனால் பிற்பகலில் அனைவராலும் பேயன் என்ற இகழ்ச்சிக்கு ஆளானான். முற்பிறவியில் தான் செய்த பாபமானது முறையாகப் பயன் தரத்துவங்கியதால் அமைச்சனது நிலை அழகிய பெண்களுக்கு அன்புமிக்க ஆடவனது இளைமை அளித்த இன்பத்தையும் அதே அழகிய பெண்களுக்கு ஒருவனது முதுமையால் அடையும் வெறுப்பையும் ஒத்திருந்தது.

321. மாயத்தால் செப்பை வவ்வி மந்திரி வணிகன் தன்னைப்
பேய் ஒத்துச் சுழலப் பண்ணிப் பெருந்துயர் முன்னம் செய்தான்
மாயத்தால் செப்புத்தன்கை வாங்கவும் பட்டுப் பின்னைப்
பேய் ஒத்துச் சுழன்று சாலப் பெருந்துயர் தானும் உற்றான்.

அமைச்சன் வஞ்சனையாக வணிகனுடைய செப்பைக் கவர்ந்து கொண்டு அவனைப்பேய் போல் அலையச் செய்தான், பிறகு தான் கவர்ந்த செப்பானது வஞ்சனையாகத் தன்னிடமிருந்து கவரப்பட்டுத் தான் பேய் போல் அலைந்து பெருந்துன்ப மெய்தினான்.

322. மணியினால் வணிகனுக்கும் மந்திரி தனக்கும் வந்த
துணிவிலாத் துயரம் பற்றின் தன்மையைச் சாற்றக்கண்டும்
பணிவிலாத் துயரமாக்கும் பற்றினைப் பரியும் நல்ல
துணிவிலா தார்களன்றே துயரங்கட்கிறை வராவார்.

மதிப்புமிக்க இந்த மணியினால் வணிகனுக்கும், அமைச்சனுக்கும் நேர்ந்த ஆற்றொணாத்துயரமானது மனிதனுடைய பொருளாசையின் இயல்பை நன்கு விளக்கியதைக் கண்டிருந்தும் பெருந்துன்பத்தைத் தரும் ஆசையை ஒழிக்கும் அறிவும், முயற்சியும் இல்லாதவர்கள் துயரங்களுக்குத் தலைவராவர்.

323. பற்றினைப் பற்றினாலே பற்றெனப் பற்றினாரைப்
பற்றுதான் இடும்பைநீருள் பரியட்டம் தன்னை ஆக்கும்
பற்றினைப் பற்றிலாமை பற்றெனப் பற்றினாரைப்
பற்றுவிட்டு இடும்பைநீருள் பரியட்டம் ஒழிக்கும் கண்டீர்.

ஆசையை உயர்ந்தது உறுதியானது என்று ஆசையோடு பற்றிக்கொண்டவர்களை அந்த ஆசையானது துன்பக்கடலில் ஆழ்த்திப் பிறப்பினை ஆக்கும். ஆசையை

ஒழிப்பதுதான் தனது ஆசை என்றிருப்பவர்களை அவ்வாசையானது நீங்கித் துன்பக்கடலில் இருந்து நீக்கி பிறவிச் சூழலிலிருந்தும் விடுபட வைக்கும். இதை உணர்வீர்களாக.

(வேறு)

324. மோகமே பிறவிக்கு நல்வித்தது
மோகமே வினைதன்னை முடிப்பது
மோகமே மு டி வைக் கெடநிற்பது
மோகமே பகைமுன்னை உயிர்க்கெலாம்.

மோகனீயகர்மத்தால் தோன்றும் ஆசையே பிறவிக்கு நல்லதோர் வித்தாகும். அந்த ஆசையே மற்ற வினைகளையும் சேர்க்கும் ஆற்றலுடையது. வீட்டுலகை அடையாமல் தடைசெய்வதும் அந்த ஆசைதான். ஆசையினால் தோன்றும் மயக்கம்தான் உயிர்களுக்குப் பெரும் பகையாகி நெடுங்காலமாய் நிற்கும்.

325. மோகமே திரியக்கிடை உய்ப்பது
மோகமே நரகத்தில் விழுப்பது
மோகமே மறமாவது முற்றவும்
மோகமே அறமாசுற நிற்பதும்.

அந்த ஆசைதான் விலங்குகதியிலும் நரக கதியிலும் கொண்டு சேர்ப்பது அறத்தை அடியோடு நீக்கி கொடிய தீவினையை முழுவதுமாகச் சேர்ப்பதும் அந்த ஆசைதான்.

326. மோகமே நிறையா நிறையாயது
மோகமே மூவுலகின் வலியது
மோகமே முனிமைக்கிடயூறது
மோகமில்லவர் நல்ல முனிவரே.

எக்காலத்திலும் ஒரு நிறைவைப்பெறாத இந்த ஆசையானது மூவுலகிலும் சக்தி வாய்ந்ததாகும். துறவு நிலைக்குப் பெரும் இடையூறாக இருப்பதும் இந்த ஆசைதான். எனவே ஆசையை ஒழித்தவர்கள் தாம் உயர் முனிவர்களாவார்கள்.

327. மேகம் வில்லொடு வீழ்ந்தது போலவே
போகமும் கிளையும் பொருளும் கெடச்
சோகமும் துயரும் துணையாக அவன்
ஏக நின்றவர் இன்ன இயம்பினார்.

வான வில்லானது மேகத்துடன் மறைந்து ஒழிந்தது போல் அமைச்சனது இன்பத்திற்குரிய செல்வமும், சுற்றமும் அடியோடு நீங்கிவிட, துன்பமும் துயரமும் துணையாகத் தொடர்ந்துவர நகரத்தை விட்டு வெளியேறும் போது அவனது நிலையைக்கண்ட மக்கள் மேலே கூறிய ஆசையின் கொடுமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

328. அங்குநின்று அவன் ஏகலும் ஆயிடைச்
சங்கை தன்முறை என்று தழுவலும்
எங்கும் வந்து இருளாயது இடர்க்கடல்
நுங்கினான் நொடியும் நெடிதாயதே.

அமைச்சன் அந்த இடத்திலிருந்து வெளியேறியபோது உள்ளத்தே தோன்றிய பயமானது நாம் இவனைவிட்டு நீங்குதல் கூடாது அது நமது கடமை என்று அவனைப் பற்றிக் கொள்ளவும், எல்லாம் இருளாகித் துன்பக்கடலிலே மூழ்கினான். இந்நிலையில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஒருயுகமாக அவனுக்குத் தோன்றியது.

329. மதலை மாடமும் மன்னிய செல்வமும்
குதலை மென்மொழியாரையும் நீத்தவன்
விதலைகொண்டு விழுந்தனன் வேந்தன்மேல்
முதலதாகிய வேரம் முளைத்ததே.

அழகிய தூண்களையுடைய மாளிகைகளும் அளவற்ற செல்வமும் இனிய மொழிகளைப்பேசும் அழகிய பெண்களையும் இழந்த அமைச்சன், மிகவும் அச்சமுற்று வீழ்ந்தான். முடிவில் வேந்தன் மீது மாறாவைரத்தனாய் மாறினான். அதனால் தோன்றிய பாப கம்மமானது உயிருடன் இறுகியது.

330. என்றுதான் இவை எய்துவது என்று எழா
நின்ற ஆர்த்தத்தின் நீடிய ஆயுளும்
குன்றவந்து விலங்கினுள் ஆயுகம்
அன்று கட்டியது ஆயுவும் அற்றதே.

இழந்த இச் செல்வங்களை இனி எப்போது பெறப்போகின்றோம் என்ற துயரச் சிந்தனையோடு வாழ்நாள் உலர விலங்கு கதியில் தோன்றும் கர்மமானது இறுகியது. அவனது வாழ்வும் முடிந்தது.

331. மிக்கு நின்றெறி விளக்கு வீந்துழி
அக்கணத்திருள் அடையுமாறு போல்
மக்களாயுகம் மாய்ந்த போழ்தினே
திக்கவாயுகம் சென் றுதித்ததே.

ஒளியுடன் எரியும் விளக்கு அணைந்த உடனே இருள் சூழுமாறு மனித வாழ்வு முடிந்தவுடனே விலங்கு பிறவிக்குரிய வினை செயல் படத்துவங்கியது. (விலங்காயுஷ்யம் உதயமாகிறது).

332. ஆயுவும் கதி ஐம்பொறி புவ்வி
நீசகோதமும் நின்று உதித்திடப்
போய் அம்மன்னவன் பொன்னறை அர
வாயினன் பெயர் அகந்தன் ஆகுமே.

விலங்கு கதி, விலங்கு ஆயுள், ஐந்து இந்திரிய சாதி நாமம், விலங்கு கதியானு பூர்வி நாமம், இழிந்த கோத்திரம் ஆகிய இவைகள் உதயம் செய்ய அமைச்சனானவன் இறந்த பிறகு சீயசேன மன்னனது கருவூலத்திலே அகந்தன் என்னும் பாம்பாகப் பிறந்தான்.

333. அரசன் மேல் கருவில் பொருளாசையில்
மரீஇய மாயத்தின் மந்திரி மற்றிந்த
திரியக் ஆயினன் தீய இச்செய்கையை
மருவு வாருளரோ மதி மாந்தரே.

மன்னன் மீது கொண்ட வைரத்தினாலும் பொருளாசையினாலும், மாறுபட்ட ஒழுக்கத்தினாலும், அமைச்சனான சத்தியகோடன் இதுபோன்ற பிறவி எடுத்தான். இதை உணர்ந்தவர்கள், ஆசையும், செற்றமும் கொண்டு இத்தகு காரியங்களைச் செய்வார்களோ.

(வேறு)

334. அளவிலா நிதியை விட்டுப் பிறன் பொருள் அதனை மேவல்
களவு தான் இரண்டு கூறாம் இயல்புகாரணங்கள் தம்மால்
அளவிலாப் பொருள் உண்டாயும் பிறன் பொருட் கிவறல் ஆதி
களவுதான் கடையதாகும் கைப்பொருள் அற்றவற்கே.

ஒருவன் தன்னிடம் அளவற்ற செல்வம் இருந்தும் நிறைவு பெறாமல், பிறர் செல்வத்தின் மீது ஆசை வைத்து அதைப்பெற நினைக்கின்றது களவாகும். அக்களவானது காரியக்களவு, காரணக்களவு என்று இருவகைப்படும், நிறைந்த செல்வம் பெற்றிருந்தும் பிறருடைய செல்வத்தைக் கவர நினைத்தல் 'காரியக்களவாகும்', இல்லாமை காரணமாக மற்றவர்கள் செல்வத்தைத் திருடுவது 'காரணக் களவு' எனப்படும்.

335. இயல்பினாங் களவினார்கட்கு இனியவாம் செய்கை ஒன்றும்
முயலுறா மனத்தராகி வாங்குவ நிறைய வாங்கிக்
குயலராய்க் கொடுப்ப வெல்லாம் குறையவே கொடுத்தலாகும்
முயலுறார் இவை செய்யாதே ஒருபகல் ஒழிய மேலும்.

காரியக்களவை மேற்கொண்டவர்கள் ஒழுக்கத்தோடு கூடிய நேர்மையான எந்தக் காரியத்திலும் முயலாது தவறான உள்ளத்துடன் தாங்கள் பெறுவதை அளவுக்கு மீறி அபகரித்துப் பெற்று பிறருக்குத் தர வேண்டியதை ஏமாற்றிக் குறைவாகக் கொடுத்து ஏமாற்றுவார்கள், இத்தகு இழிச்செயலைச் செய்யாமல் ஒரு நாளைக் கூடக் கழிக்கமாட்டார்கள், நல்ல செயல்களில் அவர்கள் முயற்சி ஒருநாளும் செல்லாது.

336. மீன்சென்ற நெறியைப் போலும் விரும்பினார் வேட்கையாதி
தான் சென்ற மனத்து மள்ளர் தாம் பொருள் அதனுக்காகக்
கான் சென்ற நெறியின் மன்றில் சுருங்கையிற் களவு நூலின்
சூன் கொண்டு கொள்ளை கொள்ளல் காரணக்களவு தானே.

அடுத்து காரணக்களவு என்பதைத் தொழிலாகக் கொண்ட கயவர்கள், பொருளாசை மிகுந்தவராய் நீரிலே மீன்கள் செல்லும் வழி எப்படி அறியமுடியாது போகின்றதோ அதுபோல் பிறரால் அறிய இயலாத வழிகளில் சென்று வெளியிலிருந்து கன்னம் முதலிய வற்றால் வழியாக்கிக்கொண்டு திருட்டு நூலில் கூறிய வண்ணம் உடலை ஒடுக்கி உள்ளே நுழைந்து கொள்ளையடிப்பார்கள்.

337. பொருளினைப் போக்கும் சீர்த்தி தன்னொடும் புகழைப் போக்கும்
அருளினைப் போக்கும் சுற்றம் தன்னொடு ஆயு போக்கும்
பெருமையைப் போக்கும் பேறுதன்னொடு பிறப்பைப் போக்கும்
திருவினைப் போக்கும் தோற்றம் தன்னொடு சிறப்பைப் போக்கும்.

மேலே கூறிய இருவகைக் களவின் மூலம் அபகரிக்கும் தொழிலானது ஏற்கெனவே தங்களிடமிருந்து பொருளையும் சேர்த்து அனைத்தையும் அழித்துவிடும், அழகு, புகழ், தயவு, சுற்றம் முதலியவற்றையும் இழக்கச்செய்து இறுதியில் உயிருக்கு ஊறு செய்துவிடும், பெருமை, ஆக்கம் நல்ல கதியில் செல்லுதல் ஆகியவற்றையும் ஒழித்துத் திருமகளின் அருளும் கிடைக்காது. பிறர் போற்றும் வாய்ப்பும் நீங்கிவிடும். அனைத்தையும் களவு செய்தே தீரும்.

338. அங்கத்தைக் களைந்து வீழ்க்கும் அருஞ்சிறைப் பிணியை ஆக்கும்
வெங்கயத்து அடியின் வீழ்க்கும் வெந்நுனைக் கழுவில் ஏற்றித்
தொங்குவித்து ஒழியும் தூண்டில் தோலினை உரிக்கப் பண்ணும்
கொங்கையைக் குறைக்கும் மங்கைக் கண்ணினைக் குடையப் பண்ணும்.

மேலும் களவானது கடும் தண்டனைகளால் உறுப்புகளையும் இழக்கச் செய்யும், அருஞ்சிறையில் தள்ளும், கடுங்கோபமுடைய யானைகளின் காலிலே மிதியுறச் செய்யும், வெப்பம் மிக்க கழுவிலே ஏற்றும், பெரிய கொடிய தூண்டில்களில் தொங்கச் செய்யும், உடல் தோலையே உரிக்கச் செய்யும்; பெண்கள் இத்தொழில் செய்தால் அவர்தம் மார்பகங்களைக் குறைக்கும், கண்களைக் கருவிகளால் குடைந்தெறியப் பண்ணும். (இவை அனைத்தும் அக்காலத்தில் கள்ளர்களுக்குக் கொடுத்த தண்டனைகள் என்று அரிக)

339. விழுந்தெழு நரகத்துய்க்கும் வெருவுறு விலங்கில் ஆக்கும்
அழிந்த தீக்குலத்தில் உய்க்கும் அட்டுணா அகத்துள் ஆக்கும்
இழிந்த தம் சுற்றத்தார்க்கும் பிச்சையும் இடாமல் காக்கும்
கழிந்தநோய் உடம்பை ஆக்கும் தாயரும் கடியப் பண்ணும்.

இத்துடன் கள்ளர்கள் வாழ்வு முடிந்தாலும் இத்தொழிலானது மறுபிறவியில் தலை கீழாக எழும்பி விழுகின்ற நரகத்தே விழச் செய்யும், விலங்காகப் பிறக்க வைக்கும், இழி குலத்திலே சேர்க்கும். ஒரு வேளை உணவுக்கும் வழியற்ற வறிய இல்லத்தே பிறக்கச் செய்யும், பிச்சை எடுத்தாலும் யாரும் ஈய மாட்டார்கள், உறுப்புகளைக் குறைக்கும், கொடிய நோய் வாய்ப்படச் செய்யும், ஈன்ற தாயும் வெறுக்கும் நிலையை உண்டாக்கும்.

340. ஆதலால் களவதாகா இருமைக்கும் ஒருமை ஒக்கத்
தீதெலாம் ஆக்கும் என்று தேறு நல்லறத்தைச் செப்பும்
பூதிதான் ஆதியாய களவினைப் பொருத்திப் பொல்லா
நீதியால் அமைச்சு நீங்கா செல்வமும் கிளையும் நீத்தான்.

எனவே களவு யாரும் ஏற்கத்தக்கதல்ல. இம்மை மறுமை என்னும் இருபிறவிக்குமே, ஒருங்கே தீமைதரக்கூடியது இக்களவு என்று உறுதியாகக்கூறும் நல்லறத்தினை அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துக்கூறிய சிரிபூதி அமைச்சனானவன் தானே இருவகைக் களவுகளில் காரியக்களவினைக் கைக்கொண்டு தவறான நெறியில் ஒழுகி அமைச்சர் பதவியையும், பெருஞ் செல்வத்தையும் இழந்தான்.

341. மந்திரி வடிவை எல்லாம் மன்னவன் மனதிவ்வாறு
சிந்தியா வியந்து நோக்கா தேறுவது யாரை என்னா
அந்தணன் தமிலன் தன்னை அவன் பதத்து அமைச்சனாக்கி
மந்திரம் போல நின்று மண்ணினைத் தாங்கும் மன்னோ.

மேற்கூறியவண்ணம் மன்னனானவன் அமைச்சனது வஞ்சம் நிறைந்த செயலை எல்லாம் மனிதிலே எண்ணி வியந்து சிந்தித்து இனி யாரைதான் நம்புவது என்று ஆய்ந்து முடிவில் தர்மிலன் என்னும் அந்தணனை சத்தியகோடனின் பொறுப்பினை ஏற்கச்செய்து மேருமலையைப் போல் நடுவுநிலையினின்றும் மாறாது நின்று தனது அரசினை ஆட்சி செய்து வந்தான்.

342. திரைசெறிந்து இலங்கும் ஆழிப் படி மன்னன் தேவியோடும்
உரைசெறிந்து இலங்கும் கீர்த்தி உவகையின் ஓடச் செம்பொன்
வரை செறிந்து இலங்கும் திண்தோள் வணிகன் மற்றொருநாள் வாடா
விரைசெறிந்து இலங்க அதிங்க வனம் சென்று விரகில் புக்கான்.

ஒளிமிக்க அலைகள் திரண்டு வீசும் கடல் சூழ்ந்த நாட்டின் மன்னன் சீயசேனன் தனது தேவியுடன் உலகத்தவர் புகழும் வண்ணம் நீதி தவறாது ஆண்டு வரும் நாளில், பொன்மலை சேர்ந்து விளங்கும் வலிமைமிக்க தோள்களையுடைய பத்திரமித்திர வணிகனானவன், ஒரு நாள் மிக்க மணத்துடன் விளங்குகின்ற 'அதிங்கவனம்' என்னும் காட்டிற்கு மிகவும் மகிழ்ச்சியுடன் சென்றான்.

343. விமலக்காந்தாரம் என்னும் விலங்கலை இலங்க ஏறி
அமலமாய் இலங்கும் சிந்தை அருந்தவன் வரதன் மாவின்
கமலமாய் இலங்கும் பாதம் கைதொழுது இறைஞ்சி வாழ்த்தித்
திமிரமாய் வினைகள் தீரத் திருவறம் அருள்க என்றான்.

சென்றவன் அங்குள்ள விமலகாந்தாரம் என்னும் மலைமீது மகிழ்ச்சியுடன் ஏறிச்சென்று அங்கே குற்றமற்ற தூய தியானத்தில் இருந்த அருந்தவ முனிவர் வரதர்மா என்பவரது தாமரை மலர்போல் விளங்கும் அடிகளைக் கைகுவித்து வணங்கி வாழ்த்தி வினைகள் நீங்குமாறு அழகிய அறத்தினை அருளுமாறு வேண்டினான்.

344. அறிவு நற்காட்சி காந்தி சாந்தி நல்லடக்கம் ஐந்து
பொறிகளில் செறிவு குத்தி சமிதியும் பொருந்தி ஆசை
வறுவிய மனத்துத் தண்டம் காரவம் சன்னை வீந்த
உறுதவன் உரைக்கலுற்றான் உவந்து அவன் கேட்கலுற்றான்.

நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம், அமைதி, அறுவகை நல்லடக்கம், ஐம்புல அடக்கம், மனம் மொழி செயல்களில் கட்டுப்பாடு, ஐவகை சமிதி ஆகிய இவற்றை முழுமையாகப் பெற்று ஆசையை அடியோடு நீக்கி, மன வசன காய தண்டங்களும், மூவகை காரவங்களும், சன்னைகள் நான்கும் ஆகியவற்றையும் ஒழித்து மேலான தவத்தை ஏற்றுள்ள வரதர்ம முனிவர் உரைத்ததைப் பத்திரமித்திரன் மகிழ்ச்சியுடன் கேட்கலுற்றான்.

345. கருணையும் அறிவும் உண்டி உறையுளும் ஈதல் காமம்
மருளிலா இறைவன் பாதம் சிறப்பொடு வணங்கல் மையல்
இருளறத்தெளிதல் வென்றோர்க்கு இறைவனது அறத்தைச் சீலம்
மருவி நின்று ஒழுகல் மாற்றில் சுழற்சி தீர் மருந்தி தென்றான்.

அனைத்துயிர்களிடத்தும் அருள் செலுத்துதல் அறிவைத்தரும் நூல்களை அளித்தல், இருக்க இடம் கொடுத்தல், குற்றமற்ற உணவினை வழங்கலாகிய நால்வகை தானங்களைப் புரிதல், ஆசை மயக்கம் இவைகளை அடியோடு நீக்கிய இறைவனுக்குரிய பூசையுடன் வணங்குதல், ஐம்பொறிகளை வென்ற முனிவர்களின் அருளிய தலைவனாகிய இறைவன் அறத்தினை ஐயம்திரிபற உணர்தல், இஉயர் ஒழுக்கங்களை மேற்கொள்ளுதல் ஆகிய இவைகள் பிறவிப் பிணியைப் போக்கும் மருந்தாகும் என்றார்.

346. வதங்கள் பன்னிரண்டும் மேவி வையகத்து உயிர்கட் கெல்லாம்
இதம் செய்து வருந்தில் வெந்தீயிடு வெண்ணெய் போன்று இரங்கிச்
சிதைந்து இன்னாதன செய்தார்க்கும் இனியவே செய்து சிந்தைக்
கதம்கடிந்து ஒழுகல் நல்லோர் கருணைக் கொடுத்தலாமே.

மேலும் நற்காட்சியுடையோர் பன்னிரு விரதங்களையேற்று, அனைத்துயிர்களுக்கும் நன்மை செய்து, அவைகள் வருந்துங்கால் அவற்றிற்காக மிகவும் இரங்கி வெண்ணெய்போல் மனமுருகுதலும், சிந்திக்காது செற்றம்கொண்டு தமக்குத் தீங்கு செய்பவரிடத்தும் அவர் திருந்துமாறு நன்மையே செய்தும், தமது உள்ளத்தில் சினத்திற்குச் சற்றும் இடம் தராது ஒழுகுதல் தான் அருள் செய்தல் என்னும் அபயதானமாகும் என்றார்.

347. இங்கியல் மூடம் என்னும் இருளினைத் துறந்து கொண்டு
வெங்கதிர் போலத்தோன்றி மெய்ம்மையை விளக்கி நிற்கும்
அங்க பூவாதி நூலின் அறிவினைச் செறியச் செய்தல்
மங்கலத் தொழிலினார்க்கு மதியினைக் கொடுத்தலாமே.

இவ்வுலகில் மக்களிடம் நிறைந்துள்ள உலக தேவபாசண்டி என்னும் மூன்று மூடத்தன்மைகளாகிய இருளினை ஒழிக்கும் விரும்பத்தக்க இளம் சூரியனைப் போல் நின்று உண்மைத்தன்மையை உணரச் செய்யும் அங்கம், பூர்வம் என்னும் நூல்களினால் உயர்நிலை எய்தும் தன்மையை உடையோர்க்கும் நல்ல அறிவினை வளர்த்தல் சாத்திர தானமாகும்.

348. உடம்பு உணர்வு ஒழுக்கம் காட்சி உவகை நல்லின்பம் வாழ்நாள்
விடங்கு ஒளி வீரம் வீடு மெய்த்தவம் தருமம் சீலம்
அடங்கலும் ஈந்தான் உண்டி ஈந்தவன் அதனால் வையத்து
உடம்பு கொண்டவர்கட்கு உண்டி போல்வதோர் உதவியின்றே.

தூய உணவைப் பிறர்க்கு வழங்கியவன் நல்லுடலும், நல்லறிவும், உயர் ஒழுக்கமும், நற்காட்சியும், மிக்க மகிழ்ச்சியும், நல்வாழ்வும், நிறை ஆயுளும், எழிலும், பொலிவும், வீரமும், உயர்தவமும், நல்லறமும், வீடும், உயர் நடத்தையும் ஆகிய இவையனைத்தையும் வழங்கியவனாவன், மற்றபடி வேறு எதுவும் அன்னதானத்திற்கு நிகராக அமையாது.

349. ஊனொடு தேனும் கள்ளும் இன்றி நன்றாய உண்டி
தான் உவந்து எவர்க்கும் ஈதல் தானமாம் தானும் மூன்றாம்
ஊன் உணும் கொடுமையார்க்கும் உடன்பட்டும் ஊன் உணார்க்கும்
மானமாதவர்க்கும் ஈதல் வரிசையால் பெருகும் மூன்றும்.

ஊன், தேன், கள் இவை மூன்றும் கலவாத தூய உணவை மிக மகிழ்ச்சியோடு பிறர்க்கு அளித்தல் ஆகாரதானம் எனக் கூறப்படும். ஊன் உண்பார்க்கு அளித்தல், ஊன் உண்ணாதவர்களுக்குக் கொடுத்தல் பெருமை மிக்க மாமுனிவர்களுக்கு வழங்குதல் என்பன; இவை, கடையாய தானம், இடையாய தானம், தலையாய தானம் எனக் கூறப்படும். (இங்கே கடையாயதானம் ஊன் உண்பார்க்கு அளித்தல் என்பது ஓரறிவுயிர்கள் நிறைந்த வெங்காயம் முதலியவற்றை உண்பவர்களைக் குறிக்கும். விலங்குகள் முதலியவற்றின் ஊனை உண்பவர்களைக் குறிக்காது. அவர்களைப் பற்றி அடுத்து கூறுவோம்.)

350. புலைசுண்பான் உண்ட உண்டி வலியினால் உயிரைப் போற்றின்
மலையினும் பெரிய உண்டி வலியினால் உயிரைச் சால
நலியுமேல் நரகத் தாழ்ந்து நடலைகள்படும் என்றால் இப்
புலைசுண்பார்க்கு உண்டி ஈதல் நன்றுமாம் அன்றுமாமே.

இங்கே, ஊன் உண்பவர்களுக்கு அளித்த உணவின் ஆற்றலால் (உணவை ஏற்ற கடைநிலைதானத்திற்குரியவன்) பிறஉயிர்களிடம் கருணை கொண்டு உதவிபுரிவானாயின், அவனுக்கு உணவளித்தவனுக்குச் சிறந்த புண்ணியமாகும். அதைவிடுத்து உண்ட வலிவினால் பிற உயிர்களை வருத்துவானாயின் உணவளித்தவனுக்கு நகரம் செல்லக்கூடிய பாபம் வந்து சேரும். எனவே கடைநிலை தானத்தினால் நன்மை வந்தாலும் வரலாம் தீமை நேரினும் நேரலாம்.

351. அகதிகள் அறத்தின் நின்றார் அரும்பிணியாளர் மூத்தார்
குகதிகள் குருடர் மூகர் கொலைத் தொழில் மனத்தும் இல்லார்
அகல்கையில் ஏந்தினோருக்கு அருளினால் ஈந்த உண்டி
மகரிகை மலிந்த பூணோய் மத்திம தானமாமே.

மகரகண்டிகையை அணிந்த பத்திரமித்திரனே! வறுமை எய்தியோர், விரதங்கள் ஏற்ற அற உணர்வுடையோர், கொடிய பிணியாளர்கள், முதியவர்கள், உறுப்பு ஊனமுற்றோர், குருடர், ஊமை போன்றோர், உயிர்களுக்குத்துன்பம் செய்ய மனத்தாலும் நினையாதவர்கள், பாத்திரம் ஏந்திப் பிச்சை எடுப்போர் ஆகிய இவர்களிடத்து அருள் கொண்டு அளித்த தானம் இடைநிலை தானம் எனப்படும்.

352. உறவியைப் பெரிதும் ஓம்பி ஒழுக்கத்தை நிறுத்தி உள்ளம்
பொறிவழி படர்ச்சி நீங்கிப் பிறர்க்கு நன்று ஆற்றிப் பொய்தீர்
நெறியினைத் தாங்கி நீங்கா வீட்டின்பம் விழைதல் செய்யும்
உறுதவர்க்கு ஈந்த எல்லாம் உத்தம தானமாமே.

மேலும், அனைத்துயிர்களிடத்தும் அருள் கொண்டு தவ ஒழுக்கத்தில் தளராது நின்று, ஐம்புலவழிகளில் மனம் செல்லாது தடுத்து அனைவருக்கும் நன்மையே புரிந்து குற்றமற்ற மெய்ந்நெறியினை அதாவது மும்மணிகளை ஏற்று, எப்போதும் நீங்கா வீட்டின்பத்தை விரும்பும், மிகச் சிறந்த தவ முனிவர்களுக்கு வழங்கிய தானம் உத்தம தானம் எனப்படும்.

353. ஊனொடு தேனும் கள்ளும் உவந்தவை பிறவும் ஈதல்
தானமென் றுரைத்துத் தம்மைக் கொன்று உயிர்க்கு ஊனை ஈவார்
தானமும் தயாவும் எல்லாம் தாம் கண்டவாறு காண்க
ஈனமென்றாலும் கேளார் இயல்புவேறு லகத்தாரே.

ஊன், தேன், கள் இவற்றுடன் தாங்கள் விரும்பும் மற்றவைகளையும் சேர்த்துக் கொடுப்பதுதான் தானம் என்றும், தேவைப்பட்டால் தனது உடல் உறுப்பினையோ, அல்லது தன்னையோகொன்று தனது ஊனை மற்றவர்க்கு அளிக்கவும் துணிந்தவர்கள் தங்கள்

மனம்போல் தானம் செய்து, பிறர்பால் அன்பு கொள்வது இவையெல்லாம் அவரவர் விருப்பப்படியே இருக்கும். மற்றவர்கள் இது அறமல்ல என்று எடுத்துரைத்தாலும் கேட்கமாட்டார்கள். (அவர்களைப் பற்றியோ, அவர்தம் தானத்தைப்பற்றியோ பேச்சில்லை என்றார்).

354. அனகமாய் அனந்த மாய குணம் புணர்ந்து ஆர்வம் ஆதி
தனையிலாது இயல்பின் நின்றான் தன்மையைத் தன் கண் வைத்து
நினைதலுக்கு ஏது நல்ல சிறப்பது வினையை நீக்கும்
கனலிசேர் கனகம் தன்கண் காளத்தைக் கழற்று மாறே.

அடுத்து, அனைத்து கர்மங்களின் நீங்கி முடிவற்ற குணங்களை எய்தி விருப்பு வெறுப்பின்றி அமைதியான இயல்பின் நின்ற இறைவனது தன்மைகளைத் தனதுள்ளத்தே நிலைக்கச் செய்யும் தியாகத்திற்குக் காரணமாக அமைவது பூசையாகும். அப்பூசையானது எப்படி நெருப்பானது பொன்னிலிருக்கும் குறைகளைப் போக்கி ஒளிரச்செய்வது போல் கர்மங்களை நீக்கிக் கெடுக்கும் என்றான்.

355. இறைவனும் முனியும் நூலும் யாதுமோர் குற்றமில்லா
நெறியினைத் தெளிதல் காட்சியாம் அது நிறுத்தும் வீட்டில்
இறுகும் எண் மயம் மும்மூடம் ஆறு தீவினயமின்றி
நெறிவிளக்குறுத்தல் ஆதி எட்டங்கம் நிறைந்த தென்றான்.

இறைவனையும், அவன் வழியைப் பின்பற்றுகின்ற முனிவனையும், இறைவனால் அருளப்பட்ட நூலையும் குறைவற உணர்ந்து தெளிதல் நற்காட்சி எனப்படும். அக்காட்சியானது வீட்டினை அடையச் செய்யும், மேலும் அக்காட்சியானது எண்வகைச் செருக்குகள், மும்மூடம், ஆறு அவிநயம் ஆகியவற்றையும் நீக்கி அறத்தை விளக்கிக் கூறுதல் முதலிய எண்வகைத் தன்மைகளைப் பெற்று நிறைவுபெறும் என்று கூறினான்.

356. பெரிய கொலை பொய் களவு பிறர்மனையில் ஒருவல்
பொருள் வரைதல் மத்தம் மது புலைசு உணவின் நீங்கல்
பெரிய திசை தண்டம் இருபோகம் வரைந்தாடல்
மரீஇயசிக்கை நான்கும் இவை மனை அறத்தார் சீலம்.

கொலை, பொய், களவு, பிறர்மனை விழைதல் இவற்றை ஒழித்துச் செல்வத்தைத் தேவைக்கு மேல் சேர்த்துவைக்காது, ஊன், தேன், கள் இவற்றை உண்ணாமல், திசை விரதம், தண்ட விரதம், போக உபபோகங்களை அளவுடன் ஏற்றலாகிய விரதம் ஆகியவற்றுடன், சிட்சாவிரதம் நான்கும் ஆகமொத்தம் பன்னிரண்டு விரதங்களும் இல்லற வாழ்வில் ஏற்கவேண்டிய ஒழுக்கங்களாகும். (எனவே இவற்றை மேற்கொள்ளுமாறு பத்திரமித்திரனிடம் முனிவர் வரதர்மர் அருளினார்).

பத்திரமித்திரன் அறங்கேள்விச் சருக்கம் முற்றுப் பெற்றது.